27/02/04

Registered as a news paper.

பக்கங்கள் பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை
எக்ஸ்போ எயார்
வான் வெளியில்
உங்கள் நண்பன்...

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 06 (27.02.2004) வெள்ளிக்கிழமை இதழ் :149

# போர்நிறுத்த உடன்படிக்கையை புலிகள் சிறப்பாக பேணுகின்றனர்

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சந்திரிகா புகழாரம்



(கொழும்பு)

வரலாற்றில் முதன்முறையாக தமிழீழ விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதுடன், அவர்கள் போர்நிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் இருப்பதுகுறித்து தான் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அனுராதபுர மாவட்டத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிபீடம் ஏறிய பின்னர் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரம (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால் போர்நிறுத்தத்தில் குழப்பம் ஏற்படும்!

### பிரதமர் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்குமானால்- யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குழப்பநிலை ஏற்பட்டு நாட்டில் புதிய சிக்கல்கள் தோன்றுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நேற்றுக் கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றத்தை செய்வதையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கமாட்டாது. இத்தகைய நிலையில் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படலாம்.

இன்றைய சூழலில் மக்கள் தமது சரியான முடிவை தமது வாக்களிப்பின் மூலம் எட்ட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு ஆயுத விற்பனை; நிறுத்த தென்னாபிரிக்கா முடிவு!

## கல்வி அமைச்சர் அஸ்மால்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும்சமாதான முயற்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக பாராட்டுத் தெரிவித்த தென்னாபிரிக்காவின் கல்வி அமைச்சர் கதிர். அஸ்மால்ஸ் தமது நாடு இனிவரும் காலங்களில் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யப்போவதில்லை எனவும், தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்தக் கருத்தினைத் தெரிவித்த அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு எமது நாட்டின் வெளியுறவுச் கொள்கை தடையாக இருப்பதில்லை. ஆனால், தென்னாபிரிக்காவின் வெளியுறவுக் கொள்கை நேரடியாகவே இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பதை நிறுத்துமாறு கேட்டுள்ளது.

சில நாடுகளுக்கு தென்னாபிரிக்கா ஆயு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அட்டாளைச்சேனையில் நேற்று பேரியல் அஷ்ரப்புக்கு எதிர்ப்பு!

(அம்பாறை)

சம்மாந்துறையில் நடைபெறவிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரப் பணிக்கு பேரியல் அஷ்ரப், எச்.எம். எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் அட்டாளைச்சேனையூடாக செல்லவிருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அட்டாளைச்சேனை முஸ்லிம்கள், வீதிகளில் ரயர்களைக் கொளுத்தி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணி (12 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர்

## காணாமற்போன மீனவரைத்தேடிய

# கடற்படையின் தேடுதல்

# மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர்

## அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த வருடம் பெப்ரவரி 25 ஆம் திகதி தொடக்கம் இந்த வருடம் பெப்ரவரி 25 ஆம் திகதிவரையான ஒருவருட காலத்தில் இலங்கை அரசாங்கம் பொதுமக்கள் தொடர்பில் மனித உரிமைகளுக்கு மதிப்பு வழங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மனித உரிமைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இராணுவத்தினர் கொலைகளை மேற்கொண்டதாகவோ அல்லது அவர்களால் கைது செய்யப்பட்டு காணாமற்போன சம்பவங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி - சுதந்திர முன்னணி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் கண்டி நகரின் பொதுச்சந்தை முன்றலிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நாள் கூட்டம் அனுராதபுரம் பொதுமைதானத்திலும் நேற்று நடைபெற்றன.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான இந்தக் கூட்டங்களுக்கு பெருமளவிலான ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கட்சித் தலைவர்கள், மல்வத்தை- அஸ்கிரிய பீடாதிபதிகளிடம் ஆசி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### காணாமற்போன மீனவரைத்தேடிய

# கடற்படையின் தேடுதல் தோல்வியில் முடிந்தது!

(கொழும்பு)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களால் தாக்கப்பட்ட பின்னர் காணாமற்போன வடமராட்சி மீனவரை கண்டுபிடிக்க கடற்படையினரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

கடந்த திங்கட்கிழமை வடமராட்சி மீனவர் ஒருவரை வாளாள் வெட்டிப் படுகாயப்படுத்திய இந்திய மீனவர்கள் அவரைத்தூக்கி கடலில் வீசியிருந்தனர். கடந்த சிலதினங்களாக காணாமற்போயிருந்த இந்த மீனவரைத்தேடும் பணியில் கடற்படையினரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் ஈடுபட்டனர்.

நேற்றுப்பகல் நடத்தப்பட்ட தேடுதலின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.சத்திரச்சந்தியில்

# லொறி மோதி வயோதிபர் பலி சாரதி நேற்று சரணடைந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சத்திரச்சந்திப்பகுதியில் வைத்து வயோதிபர் ஒருவரை மோதிவிட்டுத்தப்பிச் சென்ற லொறியின் சாரதி நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

கடந்த 24 ஆம் திகதி லொறி மோதி காயமுற்ற வயோதிபர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

யாழ்.சத்திரச் சந்திப்பகுதியில் நடந்துசென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)



### நிரந்தர நியமனம் வழங்கப்படாமைக்கு எதிராக

# கிளிநொச்சி அஞ்சல் பதில் கடமை சிற்றூழியர் மூன்று நாட்களுக்கு வெளிநடப்பு செய்ய முடிவு

கிளிநொச்சி அஞ்சல் பதில் கடமைச் சிற்றூழியர் - பத்து வருடங்களுக்கு மேல் நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மாாச் மாதம் முதலாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு வெளிநடப்புச் செய்யப்போவதாக கிளிநொச்சி அரச அதிபருக்கு கடித மூலம் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக, அவர்கள் கிளிநொச்சி அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கிளிநொச்சி அஞ்சலகத்திலும் அதன் கட்டுப்பாட்டிற்குக் கீழுள்ள உப தபாலகங்களிலும் நிரந்தர வெற்றிடங்களை நிரப்பும் பதில் கடமை செய்துவரும் பதிவுசெய்யப்பட்ட பதில் சிற்றூழியர்களாகிய நாம் எமது நிரந்தர நியமனம் பத்து வருடங்களுக்கு மேலாகியும் வழங்கப்படாமை குறித்து இந்த மனுவைச் சமர்ப்பிக்கின்றோம்.

அஞ்சல் நிலையங்களுக்குச் சிற்றூழியர்களைச் சேர்க்கும் விதிகளின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட பதில் கடமை செய்பவர்கள், மூத்த பணியாளர் ஓய்வுபெறும் வேளை - அந்த வெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனத்திற்கு முதுநிலைப் பிரகாரம் உரித்துடையோராவர். இந்த வகையில், எங்களுக்கு இயல்பாகவே இந்த நியமனங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் வேறு தொழில் முயற்சிகளை நாடாது இருந்துவிட்டோம். எங்களிற் சிலர் ஐம்பது வயதையும் தாண்டிவிட்ட நிலையில் இன்னும் நாட்கூலிக்குப் பதில் கடமையே செய்துவருகிறோம்.

1992 ஆம்ஆண்டு மே மாதம் செய்யப்பட்ட ஆளணி மறு ஆய்வின்போது கிளிநொச்சியினதும், உப தபாற்கந்தோர்களினதும் சிற்றூழியர் எண்ணிக்கை வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கு இறுதிக் கணிப்பீடு செய்த வேளை கிளிநொச்சியின் கட்டுப்பாட்டிலுள்ள உப தபாலகங்களின் எண்ணிக்கை தவறுதலாக விடப்பட்டதால 01.05.1992 தொடக்கம் ஆளணி எண்ணிக்கை தவறாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத் தவறொன்றிற்கு நாங்கள் இரையாகிவிட்டதால், இதைத் தயவு செய்து கவனத்தில் எடுத்து நாங்கள் பதில் கடமை செய்யத் தொடங்கிய நாளிலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் எங்கள் நியமனங்களை வழங்க உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இது தொடர்பாக 2003 ஆம் ஆண்டு மே மாதம தபால் அமைச்சருக்கும் அதன்பின் பிரதமரின் செயலாளருக்கும் நாம் அனுப்பிய கடிதங்களினதும் அவற்றிற்குக் கிடைத்த பதில்களதும் பிரதிகளை உங்கள் பார்வைக்காக இத்துடன் இணைத்துள்ளோம்.

நீண்டகாலமாக எங்கள் வாழ்வாதாரப் பிரச்சினை குறித்து மேலதிகாரிகள் கரிசனை கொள்ளாத காரணத்தினால் - ஒரு மாத முன்னறிவித்தலுடன் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்குக் கடமையிலிருந்து விலகி நிற்க மன வருத்தத்துடன் முடிவெடுத்துள்ளோம். தயவு கூர்ந்து எங்களை இந்த இக்கட்டான நிலைக்கு தள்ளிவிடாது எங்கள் நியமனங்களை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். என அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று ஒருநாள் வேலைநிறுத்தம்!

யாழ்.பல்கலைக் ஆசியரியர் சங்க அங்கத்தவரும் மருத்துவ பீடாதிபதியுமான கலாநதி க.சிவபாலன் கடந்த வாரம் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாக இன்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஒருநாள் வேலை நிறுத்தத்தினை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வேலை நிறுத்தம் தொடர்பாக பல்கலைக்கழகத்தில் இன்று காலை 9 மணியளவில் கண்டனக்கூட்டமும் மகஜர் கையளிப்பும் இடம்பெறவுள்ளது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஆசிரியர் சங்கத்தின் வேலைநிறுத்தம் ஊழியர் சங்கம் பங்குபற்ற மாட்டாது

மருத்துவ பீடாதிபதி கலாநிதி சிவபாலன் இனந்தெரியாதவர்களால அச்சுறுத்தப்பட்டதை கண்டித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று நடத்தவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பங்குபற்றாது என பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- எமது ஊழியர் சங்க நிர்வாகத்துக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு 24 மணிநேர கால அவகாசத்தை வழங்கமுடியாமையினால் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற முடியாதுள்ளது. மருத்துவ பீடாதிபதி சிவபாலன் அச்சுறுத்தப்பட்டதை எமது சங்கம் ஏகமனதாகக் கண்டிக்கின்றது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ள கருத்து குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

நாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் தொழிற்சங்க சட்டவிதி முறைகளுக்கு முரணானது எனக் கூறி பல்கலைக்கழக நிர்வாகம் எம் மீது நடவடிக்கை எடுக்க முனையும்,

எனவே, எதிர்காலத்தில் எமக்கு உரிய அவகாசத்துடன் அறிவிப்பினைத் தரும் போராட்டங்களுக்கு எமது ஆதரவு கிடைக்கும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், சுகாதார தொண்டர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்யசீலன் அறிவித்துள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்கள் வயது ரீதியாக இவ்வருட மாணவர் விபரங்களையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவாகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருப்பதால், இந்தக் கலந்துரையாடலுக்கு சகல மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## மெய்வன்மைப் போட்டி

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப. 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (41)

## கையசைத்துப்போன காற்று நான்காம் ஆண்டு நினைவில்

21 - 03 - 1955



27 - 02 - 2000

### திருமதி அசுந்தா கனகரத்தினம்

(யோகராணி)

ஒழுவில் வீதி, கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை

முக்காலியாய் இருந்தோம்
இருகாலியாய் ஆக்கிவிட்டு
கையசைத்துப் போய்விட்டாய்
உன் பிரிவின் நினைவால்
இன்றும் தவிக்கின்றோம்
நித்திய இளைப்பாற்றுக்காய்
இறையிடம் இறைஞ்சுகின்றோம்.

ஒழுவில் வீதி,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(643) குடும்பத்தினர்


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HERO HONDA உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- NO 9 பிளக்கர் ஒழுங்கை சுண்டுக்குளி T.P 021-222-7357, 0777-113880.

(642)

## யாழ் மண்ணிலேயே முதன்முறையாக...

இந்தியாவின் Praba's Institute of health care management நிறுவனங்களின் இயக்குநரும் தியாகராஜர் Poly tecnic மற்றும் காமராஜர் பல்கலைக்கழகத்தினதும் (மதுரை) விரிவுரையாளருமான



திருமதி பிரபாரெட்டி (M.A, M.s) அவர்களாலும் அவரது குழுவினராலும் இரண்டு நாள் அழகுக்கலை பயிற்சி வகுப்புக்களையும் அதனைத் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கவுள்ளார்கள்.

இப்பயிற்சி வகுப்பினை முன்னிட்டு 29.02.2004 ஞாயிறு காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:- 071 2346781
024 589743

முக்கிய குறிப்பு:- மேற்படி பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் அனைவருக்கும் திருமதி பிரபாரெட்டி அவர்களால் சான்றிதழ் உடன் வழங்கப்படும்.

(654)

## நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த

### சாமி

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00. (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

CHICACO

(சி-2196)

## ராஜா யாழ்ப்பாணம்.

இன்றுமுதல்
பார்த்திபன்,
விக்னேஸ் நடித்த




(சி-2197)

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## சீனி விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சீனி விற்பனைக்குண்டு

**50 Kg எடையுள்ள மூடை – 1750/-**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:- ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 021 - 2222350

(சி-2259)


## கண்ணீர் அஞ்சலி



### திரு. சின்னத்துரை வியாகேசன்

(தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க பணியாளன்)

அன்னார் 26.02.2004 ஆம் திகதி மறைந்த செய்தி கேட்டு மிகுந்த கவலையடைகின்றோம். அன்னாரின் சேவைகள் நினைவுகூரப்பட வேண்டியதுடன், அன்னாரின் மறைவால் துயரத்தில் ஆழ்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

(சி-2268)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# சட்டத்தை மீறும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் !

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

சட்டத்தைத் தமது கையில் எடுத்துச் செயற்படமுயலும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்துக் பொலிஸ் மா அதிபர் கருத்துக் கூறுகையில், தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், அவறறை மீறுவதால் ஏற்படும் சட்டச் சிக்கல்கள் தொடர்பாகவும் ஏற்கனவே அரசியல்வாதிகளுக்குப் போதிய அளவுக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே, இத்தகைய சட்ட மீறல்கள் தொடர்பாக இயன்றளவு அதிகாரத்தைப் பயன்படுத்தும்படி தாம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கட்டளையிட்டுள்ளதாகவும் -

வெலிக்கடை பகுதி பொலிஸ் நிலையம், அந்தப் பகுதி அரசியல்வாதிகளால் மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளமை தொடாபான தகவல் ஒன்று தமக்குக் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. அத்துடன், இரத்தினபுரி பகுதியில் கட்டப்பட்டிருந்த கட்சிக் கொடிகளை அகற்றியமை தொடர்பில், முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொலிஸாரை மிரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிக ஆசனங்கள் ஒதுக்கினால்

# ஐக்கிய மக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்கத் தயாராம் !

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு நாடாளுமன்றில் அதிக ஆசனங்கள் ஒதுக்கப்படுமாக இருந்தால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நாம் இணையத் தயார்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எங்களுடன் நல்லுறவினை ஏற்படுத்துமாக இருந்தால், நாம் அவர்களுக்கு எமது ஆதரவினை வழங்கத் தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏழு மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் தனித்தும் போட்டியிடுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அரச ஊடகங்கள் தவறான பிரசாரம்; கதிர்காமரை விவாதத்துக்கு அழைப்பு!

அரச ஊடகத்துறை தவறான வழியில் பயன்படுத்தப்படுவது தொடாபாக, அவசர கலந்துரையாடல் ஒன்றைத் தற்போதைய ஊடகத்துறை அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமருடன் நடத்துவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பாக மிகவும் காரசாரமான கடிதமொன்றினை ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் செனரத் ஹப்புக்கொட்டுவ - லக்ஷ்மன் கதிர்காமருக்கு எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - அரச ஊடகத்துறையில் வரும் செய்திகள் - சகலருக்கும் நீதியானதாகவும், நேர்மையானதாகவும் அமையுமென ஒரு அறிவுறுத்தலை வெளியிட்டிருந்தீர்கள். ஆனால், நீங்கள் சொன்னது போல ஒன்றும் நடக்கவில்லை. அது ஒருபக்கச் சார்பாக நடப்பதுடன், மற்றவர்களைப் பற்றியும் தேவையற்ற விதத்தில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், இது தொடர்பில் நீங்கள் கூறிய வார்த்தைப்படி எதுவும் நடக்கவில்லை. இவ்வாறு நடப்பதையிட்டு நீங்கள் எதுவித கவனமும் செலுத்தவுமில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்கள்மீது அரச ஊடகங்கள் தேவையற்றவிதத்தில் கருத்துக்களைத் தெரிவித்து வருகன்றன. இது தொடர்பாக நான் தோதல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளோன். ஊடகத்துறைக்குப் பொறுபபானவர் என்ற வகையில், அதில் ஏற்படும் சகல தவறுகளுக்கும் நீங்களே பதில் சொல்ல வேணடும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய ஹெல உறுமயவுடன் எந்தத் தொடர்பும் இல்லை!

தேசிய ஹெல உறுமயவின் நடவடிக்கைகளுடன் சிஹல உறுமயவுக்கு எதுவித தொடர்பும் இல்லை என சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தேசிய ஹெல உறுமய எனப்படும் அரசியல் கட்சி ஆறுபேர் கொண்ட பௌத்த பிக்குகளின் அதியுயர் பீடத்தினால் நிர்வகிக்கப்படுவதாக நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றின்போது, சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஏதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தேசிய ஹெல உறுமயவைத் தாம் இயக்குவதில்லை எனவும், அந்தக் கட்சியின் கொள்கைகளையும், செயற்பாடுகளையும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களுடைய செயற்பாடுகள் குறித்தும் பௌத்த பிக்குகள் அடங்கிய அதியுயர் பீடமொன்றே மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளையே தாம் மேற்கொண்டதாகவும் அவர் இச்செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டு தேர்தல் ஆவணங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்படும்

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அனைத்தையும் விமானம்மூலமாகவே யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்வதற்கு, தபால்மா அதிபர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போதைய நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டே தாம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகத் தபால்மா அதிபர் குறிப்பிட்டார்.

ஏ-9 வீதியூடாக இந்த ஆவணங்களை அனுப்பமுடியுமாக இருந்தபோதும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியூடாக இவற்றை எடுத்துச் செல்லும்போது, அதை அவர்கள் பரிசோதனைக்குட்படுத்துவர்.

அஞ்சல் விதிமுறைகளின் அடிப்படையில் அந்த நடைமுறையை ஏற்கமுடியாது.

இது தொடர்பாக யாழ். குடாநாட்டிலுள்ள தபால் அதிகாரிகளுடன் தான் பேச்சுக்களை நடத்தியதாகவும் தபால்மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் ஆவணங்களைத் தபால்மூலம் அனுப்புவது தொடர்பாகத் தபால்மா அதிபர் - விமானப்படை மற்றும் படை அதிகாரிகளின் உதவியை நாடியிருப்பதாகவும் தெரியவருகிறது.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்திக்க வந்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# தவறான வழியில் பணம் பயன்படுத்துவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும்!

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. கோரிக்கை

மக்களின் பணம் தவறான வழியில் பயன்படுத்தப்பதைத் தடுப்பதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், கப்பல் மற்றும் துறைமுக அமைச்சு 54 மில்லியன் ரூபா பெறுமதியானதும், 19 மில்லியன் ரூபா பெறுமதியானதுமான இரண்டு காசோலைகளைத் திறைசேரியின் அனுமதியின்றி பெற்றுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமைப்பதால், தமது இடங்களை இழக்கவுள்ளவர்களுக்கு இழப்பீடாக 54 மில்லியன் ரூபா பணம் பெறப்பட்டதாகவும், 19 மில்லியன் ரூபா பணம் கப்பற்துறையினரால் பெறப்பட்டுள்ளதாகவும் -

இவை சரியானமுறையில் திறைசேரியின்மூலம் பெறப்படவில்லை எனவும் தெரிவித்த அவர், இந்தப் பணம் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதால், இது குறித்து ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, விமல் வீரவன்சவின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான தமது கருத்தை வெளியிடுவதற்காக நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்திய அமைச்சர் ரவூப் ஹக்கீம், இது வேண்டுமென்றே கூறப்படும் குற்றச்சாட்டு எனவும், இது தொடர்பான செய்திகளை வெளியிட்ட அரச ஊடகங்களுக்கு எதிராகத் தாம் மானநஷ்ட வழக்குத் தொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தேர்தலில் போட்டியிடும் பிக்குகள் நிச்சயமாகத் தோல்வி அடைவர்!

## பத்தேகம சமித்த தேரர் கருத்து

ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் விருப்பு வெறுப்புக்கு இணங்கத் தேர்தலில் போட்டியிடும் பிக்குகளுக்கு, சிங்கள மக்களின் ஆதரவு என்றும் கிடைக்காது. அவர்கள் நிச்சயம் தோல்வியடைவார்கள் என பத்தேகம சமித்த தேரர் தெரிவித்தார்.

மோசமான முன்னுதாரணமாகப் பிக்குகள் இவ்வாறு செயற்படுவது குறித்து தாம் மிகவும் மனம் வருந்துவதாகத் தெரிவித்த அவர் - பௌத்த பிக்குகளின்மூலம் தமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முயலும் இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்குச் சிங்கள மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று தாம் கருதுவதாகவும் கூறினார்.

ஐ.தே.மு. அரசாங்கத்தின் தவறான சமாதான முன்னெடுப்புக்களின் காரணமாக, இவ்வாறான இனவாதக் கட்சிகள் பலம்பெற வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பிரதமர், நாட்டு நலனையோ, தமிழ் மக்களின் விடிவுக்காகவோ செயற்படாது, ஜனாதிபதி பதவியை இலக்காகக் கொண்டு செயற்பட்டார்.

இவ்வாறான செயற்பாடுகளில்தான் ஜாதிக ஹெல உறுமய கட்சி போன்ற இனவாத சக்திகள் தறிகெட்டுச் செயற்படுகின்றன. இன்று பிக்குகள் வேட்பாளர்களாகியிருப்பதால், பிக்குகளின் நிலைமை மோசமாகியுள்ளது. பிக்குகளும் இவ்வாறு கொள்கையற்றநிலையில் செயற்படுவதைச் சிங்கள மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் சமித்த தேரர் கவலை தெரிவித்தார்.

## பிந்துனுவெவ படுகொலை

# மரணதண்டனை பெற்றவர்களின் மேன்முறையீடு விசாரணைக்கு ஏற்பு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மரணதண்டனை பெற்றவர்களின் மேன்முறையீட்டை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் தலைமை நீதியரசர்கள் சரத் என் சில்வாவின் தலைமையில் ஐந்து பேர் அடங்கிய நீதியரசர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25 ஆம் திகதி 28 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக, தியத்தலாவை மற்றும் பண்டாரவளை பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

இவர்களின் மேல்முறையீட்டு விசாரணைகளை உயர் நீதிமன்றம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்தவுள்ளது. (01)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

# நுவரெலியா வேட்பாளரின் வாகனங்கள்மீது கல்வீச்சு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சி.பி.ரட்ணாயக்காவின் வாகனத்தொடரணிமீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தப்பட்டதில் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு ரிகலாப்கட என்ற இடத்தில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சி.பி.ரட்ணாயக்காவின் ஆதரவாளர்கள் இந்த நகரில் கூடியதையடுத்து, அவர்களைக் கலைக்க பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன்போது இருதரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கடுமையான காயங்களுக்கு இலக்கான அதேவேளை, மேலும் இருவர் சிறிய காயங்களுக்கு இலக்காகினர்.(01)

# சுப்பர் லீக் இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்து, பாகிஸ்தான் வெற்றி



ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் ஏழாவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் சிம்பாப்வேயைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் சிம்பாப்வே அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்து. சிம்பாப்வே அணி வீரர்கள் ஆரம்பத்திலிருந்து நிலைத்து நின்று ஆடியபோதும் சீரான வேகத்தில் விக்கெட்டுக்கள் சரிந்துகொண்டிருந்தன.

இதனால், 50 ஓவர்கள் முடிவில் 218 ஓட்டங்களை 9 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது. பிறெஸ்டன் ரெயிலர் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

டேவிட் ஸ்ரிப் மற்றும் பிறெஸ்னர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலிஸ்ரெயர் குக், ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களைப் பெற்றபோதும் அவருக்கு அடுத்த மூன்று பேரும் 5, 1, 16 என்ற சொற்ப ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது விக்கெட்டுக்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அலஸ்ரெயர் குக்குடன் இணைந்து, லூக் றைற் 79 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 49 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து இங்கிலாந்து அணி வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக அலிஸ்ரெயர் குக் தெரிவானார்.

பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் டாக்காவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான், நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த அணியின் முதல் நான்கு வீரர்களான - ஹரி 33, வற்லிங் 38, கிறிஸ்ப் 25, வில்சன் 38 என்ற ஓட்டங்களை எடுத்தபோதிலும் அதற்குப் பின்வந்த வீரர்கள் அனைவரும் 15 ஓட்டங்களைக்கூடப் பெறவில்லை.

பந்து வீச்சில் - பஸ்சா, அம்ஜாட், ம.ஃமூட் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 34.2 ஓவரில் தனது வெற்றி இலக்கை அடைந்தது. இந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லத்தீப் 86 பந்துகளில் ஒரு சிக்ஸர், 13 பவுண்டரிகள் அடங்கலாக 90 ஓட்டங்களையும், முதலாவது ஆட்டக்காரரான ஷகீப் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பின்ட்லே, ஏத் ஒன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக காலித் லத்தீப் தெரிவானார்.

# அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்களால் இலங்கை அணியை தோற்கடித்தது



இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாவது ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே நன்றாக அமையவில்லை.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூரிய ஓட்டமெதுவும் பெறாமலும், அணித்தலைவர் அத்தப்பத்து 3 ஓட்டங்களுடனும், சங்ககார 15 ஓட்டங்களுடனும், ரஸல் ஆர்னல்ட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின், ஆடவந்த மஹேல ஜெயவர்த்தன - இக்கட்டான நிலையிலிருந்த அணியை ஓரளவு நல்ல நிலைக்குக் கொண்டுவந்தார். அவர் 80 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ரன் அவுட்டானார்.

அதன்பின் ஆடிய டில்சான் 30, உபுல் சந்தன 34, சமிந்தவாஸ் 24, குமார் தர்மசேன ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் ஜிலெஸ்பி 3, காஷ்பிரோவிஷ், பிரட்கொக், சைமன்ஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கில்கிறிஸ்ட் ஓட்டமெதுவும் பெறாமலும், ஹைடன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்த போதும், அதன்பின் வந்த பொண்டிங் 63, மார்ட்டின் 62, பெவன் 10 ஓட்டங்களையும், சைமன்ஸ், கிளார்க் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 45, 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக ஜிலெக்ஸ்பி தெரிவானார்.

நடந்து முடிந்த மூன்று போட்டிகளில் அவுஸ்ரேலியா 2:1 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது. நான்காவது போட்டி இன்று பிரேமதாஸ விளையாட்டரங்கில் பகல் இரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது.

விளையாட்டு

# சஹீர்கான் - முகமட் கைஃப் விளையாடுவதற்குத் தகுதி

## இந்திய கிரிக்கெட்சபை அறிவிப்பு

(டெல்கி)

இந்திய கிரிக்கட் அணி அடுத்தமாதம் 10 ஆம் திகதி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இரு அணிகளும் 5 ஒரு நாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் மோதவிருக்கின்றன.

பாகிஸ்தான் பயணத்துக்கான இந்திய அணி அடுத்தமாதம் 3 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. இதற்கிடையில் சஹீர்கான் மற்றும் முகமட் கை.ஃப் ஆகியோர் முழுமையான குணம் அடைந்துவிட்டதாக இந்திய கிரிக்கட் சபை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்திய கிரிக்கட் சபையின் செயலாளர் நாயர் கூறுகையில் - காயம் காரணமாக, அவுஸ்ரேலியாவில் நடந்த முத்தரப்பு கிரிக்கட் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட கை.ஃப் இருநாட்களுக்கு முன்பு மருத்துவச் சான்றிதழ் கொடுத்தார்.

சென்னை எம்.ஆர்.எப் மையத்தில் பயிற்சியிலீடுபட்டுவரும் சஹீர் கானும் தனது மருத்துவச் சான்றிதழை கிரிக்கட் சபையிடம் கொடுத்துள்ளார். காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் கும்ளே, அகர்கர் மற்றும் நெஹ்ரா ஆகியோரும் விரைவில் மருத்துவச் சான்றிதழ்களைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். குறிப்பிட்ட திகதிக்குள் அவர்கள் எந்த அறிவிப்பும் கொடுக்காத பட்சத்தில் அணியில் இடம் பிடிப்பது கடினம் என்றார்.

முன்னதாக வருகிற 28 ஆம் திகதி இந்திய கிரிக்கட் சபை செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி, பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நாளை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக - புனர்வாழ்வு புனரமைப்பின் அமைச்சின் செயலாளர் அ.ஜெயரட்ணமும், சிறப்பு விருந்தினராக - உடற்கல்வி ஆலோசகர் த.சிவகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.




# தமிழீழ பெருவிளையாட்டு விழா; ஏழாம் நாள் போட்டி முடிவுகள்!

(கிளிநொச்சி)

மூன்றாவது - தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழாவின் ஏழாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

தேசியக் கொடியினை மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கீதா ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி உதைபந்தாட்டச் சங்கங்களின் தலைவர் கணேசலிங்கம், கிரிக்கெட் போட்டிகளின் இணைப்பாளர் சிவனடியான், அம்பாறை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த முகமட் சலீம் அன்சகான், யாழ். கபடி அணித்தலைவர் டொமினிக் கிருபாகரன், மட்டு. கிரிக்கெட் அணி உபதலைவர் பிரபாகரன், மட்டு. துடுப்பாட்ட வீரர் ஜெய், மட்டு. கபடி அணித்தலைவர் சியா, யாழ். விளையாட்டு அணி அதிகாரி முகுந்தன் ஆகியோர் மாவீரர் திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான கபடிப்போட்டியின் இறுதிப் போட்டியில் கப்டன் திலகா. ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை மட்டக்களப்பு அணி சுவீகரித்துக் கொண்டது. வவுனியாவுக்கும் மட்டக்களப்புக்கும் இடையே நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் 21:20 என்ற புள்ளியின் அடிப்படையில் வவுனியா அணியை வெற்றிகொண்டு, வெற்றிக்கிண்ணத்தை மட்டு. அணி கைப்பற்றியது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில், போட்டியில் கலந்துகொண்ட வீராங்கனைகள் கிளிநொச்சி பிராந்திய முறியடிப்புச் சமர் பொறுப்பாளர் ஜெரிக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

ஆண்களுக்கான கபடிப்போட்டியில் - வவுனியா அணி லெப்.கேணல் சந்திரன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

யாழ்ப்பாண அணியை எதிர்த்து விளையாடிய வவுனியா அணி 51:22 என்ற புள்ளியின் அடிப்படையில் வெற்றிகொண்டது.

முன்னதாக, இந்தப் போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள் - பெருந்தோட்டப் பகுதிப் பொறுப்பாளர் நக்கீரனுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர்.

இப்போட்டியின் நடுவர்களாக- ஜஸ்ரின் பெரேரோ, விமலசேன, அபயகுலசேகர ஆகியோர் கடமையாற்றினர்.

மட்டக்களப்பு - அம்பாறை அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் அரையிறுதி ஆட்டத்தில், வீரர்கள் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர்.

போட்டிகள் தொடர்ந்து இடம்பெற்றன. நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற அம்பாறை அணி 26.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணியின் சார்பில் மதன் 19, பிரசாத் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அருண் பிரசாத் 03 விக்கெட்டையும், ரூபராஜ், கஜன், ஜெயசீலன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 19.1 ஓவரில் 07 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் யாழ். அணியை எதிர்த்து மட்டக்களப்பு அணி மோதவுள்ளது.

மட்டு. அணியின் மோகன் 18, ரூபராஜ் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்

பந்து வீச்சில் காலிதீப் 03, செறாட் 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் மைதான நடுவர்களாக சிவத்திரன், ஜேக்கப் ஆகியோரும், தொலைக்காட்சி நடுவர்களாக சிறிதரனும் கடமையாற்றினர்.

கப்டன் அன்பரசி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நடத்தப்பட்ட பெண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் - யாழ். அணி முல்லை அணியை 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

லெப். கேணல் புலேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நடத்தப்பட்ட ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி அணி 18:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டிகளுக்கு நடுவர்களாக எஸ்.சசிதராஜ், இ.த.கணேசலிங்கம், , கா.ஜெயசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.

# இங்கிலாந்து - மேற்கிந்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டி

வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத்தீவுகளுக்கு புறப்பட்டுச்சென்றது. அந்த அணி மோதும் பயிற்சி ஆட்டம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும். டெஸ்ட் தொடர் 11 ஆம் திகதி தொடங்கும். இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் மோதும் போட்டி விபரம் வருமாறு,

| | | |
|---|---|---|
| மார்ச் 11-15 | முதல் டெஸ்ட் | - (ஜமேக்கா) |
| மார்ச் 19-23 | இரண்டாவது டெஸ்ட் | - (டிரினிடாட்) |
| ஏப்ரல் 01-05 | 3 ஆவது டெஸ்ட் | - (பார்படோஸ்) |
| ஏப்ரல் 10-14 | கடைசி டெஸ்ட் | - (அன்டிகுவா) |
| ஏப்ரல் 18 | முதல் ஒருநாள் போட்டி | - (கயானா) |
| ஏப்ரல் 24 | 2 ஆவது ஒருநாள் போட்டி | - (கயானா) |
| ஏப்ரல் 25 | 3 ஆவது ஒருநாள் போட்டி | - (டிரினிடாட்) |
| ஏப்ரல் 28 | 4 ஆவது ஒருநாள் போட்டி | - (சென் ஜோர்ஜ்) |
| மே 01 | 5 ஆவது ஒருநாள் போட்டி | - (சென் லூசிகா) |
| மே 02 | 6 ஆவது ஒருநாள் போட்டி | - (சென் லூசிகா) |
| மே 05 | கடைசி ஒருநாள் போட்டி | - (பார்படோஸ்) |

# கிளிநொச்சியில் தேர்தல் நடத்த சகல ஏற்பாடுகளும் தயார்!

## கிளிநொச்சி அரச அதிபர் கடிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பை நடத்துமாறு கோரி மாவட்டத்திலுள்ள எமது அமைப்புக்கள் தமக்கு கடிதமூலம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும்,

இரணடு கடிதங்களை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் - யாழ். தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் செ.பத்மநாதனுக்கு அனுப்பிவைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடத்துவதற்கு உரிய பாடசாலை கட்டடங்கள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதனை நடாத்துவதற்கு போதிய ஆளணி வசதிகள் எமது மாவட்டத்தில் உள்ளது.

அத்துடன், உள்ளூர் வாகனங்களை ஒழுங்கு செய்து தேர்தலை நடத்துவதற்கு என்னால் முடியும் என்று தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

தேர்தல் நடத்தும் பொருட்டு, இந்தப் பகுதி வீதிகளில் வாகனங்கள் போய்வரக்கூடியதாக வீதித் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, போக்குவரத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், பொது அமைப்புக்களும், பொது நிறுவனங்களும் தமது ஜனநாயக உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு வழிவகை செய்து தருமாறும் மகஜர் மூலமாகவும், நேரடியாகவும் எனக்குப் பாரிய அழுத்தம் கொடுத்து வருவதால்,

கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்தி, சகல வாக்காளர்களுக்கும் வாக்களிக்கக்கூடிய விதத்தில் ஏற்பாடு செயயுமாறு தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து, அனுமதியைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின் றேன் எனக் கிளிநொச்சி அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# பாவனைக்குதவாத பழங்கள் யாழ்.நகரில் அழிக்கப்பட்டன

மாநகரசபையின் பிரதம பொதுசுகாதாரப் பரிசோதகர்களினால், மனித பாவனைக்குதவாத பழங்கள் சில - உரிமையாளர்களின் ஒப்புதலுடன் முற்றாக அழிக்கப்பட்டன.

கடந்த 16 ஆம் திகதி யாழ். நகரில் மேற்கொண்ட திடீர்பரிசோதனையின் போது - விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான, மனிதபாவனைக்குதவாத 200 அப்பிள் பழங்களும், 70 தோடம்பழங்களும், 100 கிலோ கிராம் சக்கரை மற்றும் சிறிய அளவிலான தின்பண்டங்கள் ஆகியவற்றைப் பிரதம பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றினர்.

அவை உரிமையாளர்களின் ஒப்புதலுடன் முற்றாக அழிக்கப்பட்டன என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீச்சல் வீரன் ஆழிக்குமரனின் தாயார், அதிபர் தவேந்திரராசா ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர், மாணவர்களையும் படத்தில் கணலாம்.

# சிறந்த எழுத்தாளராக பேராசிரியர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பிரபல விஞ்ஞான எழுத்தாளர் சுப்பிரமணியம் பேராசிரியன் - 'கருகும் பசுமை' என்றும் நூலிற்காக, வடகீழ் மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சினால்- பல்துறை (சூழலியலில்)யில் சிறந்த எழுத்தாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற இலக்கிய பெருவிழாவில் பொன்னாடைபோர்த்தி, கெளரவிக்கப்பட்டார்.

இலங்கை பல்கலைக்கழத் தமிழ் சங்கத்தின் செயலாளராகவும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் பத்திராதிபராகவும், இரசாயன பகுதி செயலாளராகவும் - பல பதவிகளையும் வகித்து வந்தார்.

தற்போது இலங்கைப் பட்டைய இரசாயனவியல் கவுன்சிலின் அங்கத்தவராகவும், இங்கிலாந்து இரசாயன கழக இலங்கைக் கிளையின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருந்துவருகிறார்.

இவர் தென்புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் க.சுபபிரமணியத்தின் மகனாவார். (17)

# இந்திய மீனவரை கட்டுப்படுத்துவதற்குத் தவறினால் பாரிய போராட்டம் நடத்தப்படும்

## வடமராட்சி கடற்தொழில் சங்க சமாசம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறின், வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய போராட்டங்களை நடத்தப்போவதாக - வடமராட்சி வடகது கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதைத் தடுக்குமாறுகோரி, அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குடாநாட்டு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் - வலைகளை அறுத்துச் செல்வதுடன், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்திவருகின்றனர்.

இதனால், உள்ளூர் மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்திய மீனவர்கள் மேற்கொணடு வரும் இத்தகைய நடவடிக்கையால், மீனவர்களின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் - சம்பந்தப்பட்டவர்கள் இந்திய மீனவர்களின் விடயத்தில் தலையிட்டு அவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டது. (13)





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------

முகவரி :------------------

பிறந்த ஆண்டு:------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------

பெற்றோர் ஒப்பம்


# ஜே.வி.பி - சலன சித்திரம் இன்று கொழும்பில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் அமைப்பின் சம்மேளம் மற்றும் மாவட்ட நிர்வாகிகளுக்கும், ஜே.வி.பி. தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தைத் தமிழிலும் இயக்குவது, பணிப்பாளர்சபையை நியமனம் செய்வது, கலைஞர் நலவுரிமையை உறுதிப்படுத்துவது, ஆபாசத் திரைப்படங்களைத் தடைசெய்வது உட்பட இலங்கைத் தமிழ்ச் சினிமாத் திரைப்படத்துறை வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படவேண்டிய முக்கிய விடயங்கள் பற்றியும், நாட்டு நடப்பின் பொதுப்போக்குப் பற்றியும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும்.

க.தேவதாசன் தலைமையில் சலன சித்திரம் அமைப்பினரும், விமல் வீரவன்ச தலைமையில் ஜே.வி.பியினரும் சந்திக்கும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்டத்திலிருந்தும் பலர் கலந்துகொள்கின்றனர்.

நாட்டு மக்களின் சுதந்திரமும், தேசியக் கலை எழுச்சியும் இரண்டறக் கலந்தவை - பிரிகக முடியாதவை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே, இந்தச் சந்திப்புக்குச் சம்மதித்ததாகச் சலன சித்திர சம்மேளனம் தெரிவித்துள்ளது.

'இலங்கை தமிழ்ச் சினிமாத் தொழில்துறையை மீளக்கட்டியெழுப்புதல்' எனும் தலைப்பில் ஒதுதி வைப்புப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கடந்த வருட இறுதியில் ஜே.வி.பியினர் முன்னெடுத்து விவாதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரியாலைப் பகுதியில் சேதமடைந்த நிலையில் உள்ள நீர்க்குழாய்கள்

யாழ்.மாநகரசபையினால் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தில், அரியாலையின் பல இடங்களில் குடிநீர்க் குழாய்கள் சேதடைந்து காணப்படுவதால், மக்கள் பெரும் சிரங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அரியாலை கலைமகள் வீதி, ஆசிர்வாதப்பர் வீதி, நொத்தாரிஸ் வீதி, கனகரட்ணம் வீதி ஆகிய இடங்களிலேயே இந்த நீர்க்குழாய்கள் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றுள் சில முற்றாகச் சேதமடைந்தும் காணப்படுகின்றன. இந்தச் சேதமடைந்த நீர்க்குழாய்கள் - இதுவரை திருத்தப்படாததால், குடிநீரைப் பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். (55)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மாதாந்த உதவிப் பணம் வழங்கல்

(வடமராட்சி)

பளை தபாலகத்திலும், இயக்கச்சி சோரன்பற்று, தாளையடி செம்பியன்பற்று, ஆழியவளை, முளளியான் உபதபாலகங்களிலும் தை, மாசி ஆகிய இருமாதங்களுக்கான மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டுவருகிறது. (17)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(வண்ணை)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடாத்தும் - சைவசமய அறிவுப்பரீட்சைக்கான பரீட்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இந்த பரீட்சைக்குத் தோற்றுகின்ற தரம் 7 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் யாழ. வைத்தீஸ்ரவராக் கல்லூரியில் இருந்து, யாழ்.இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், பரீட்சைக்கு உரிய நேரத்திற்குச் சமுகம் தருமாறும் அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

## கரமத்தை முருகன் ஆலயத்திற்கு மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தசுவாமியார் ஆலயத்திற்கு, யாழ. மாவட்ட சிக்கனக்கடன் வழங்கும் சமாசம் - மின் பிறப்பாக்கி ஒன்றை வழங்கியுள்ளது.

இந்த மின் இயந்திரத்தை உடுவில் பிராந்திய பணிப்பாளர் அழகுநாதன் வழங்கினார். இவர் கடந்த மாதம் சமாச உறுப்பினர்களுடன் நெடுந்தீவுக்கு வந்தவேளையில், ஆலய நிலையினை அறிந்தே இவ் உதவியை வழங்கினார். (113)

## நெடுந்தீவில் கைவேலைப்பயிற்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான முறைசாராக்கல்வித் திட்டத்தின்கீழ் கைவேலைப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இதில் பயிற்சிபெறவிரும்புவோர் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் வித்தியாலய அதிபரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (113)

## ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால், வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில், இது மாசிமாத 'ஞானச்சுடர்' வெளியீடு நடைபெற உள்ளது.

இதில், வெளியீட்டுரையை ஆசிரியர் துரை.கணேசமூர்த்தியும் மதிப்புரையை ஆசிரியர் செ.பரமேஸ்வரனும் வழங்குவர். (17)

## சைவசமய அறிவுப் பரீட்சை

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு குடாநாட்டிலுள்ள 19 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த எழுத்துப் பரீட்சையில், சுமார் 3600 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.




# பெண்ணுக்கு சொந்தத் தொழில் இருந்தால் மற்றவரின் துணையின்றி வாழலாம்

**ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் செல்வி நிர்மலாதேவி துரைராஜாவைச் சந்தித்து ஆயுள்வேத மருத்துவ முறைகள் தொடர்பாகவும், மற்றும் பல விடயங்கள் தொடர்பாகவும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டபோது.**



மனோகராச் சந்தி, நாங்கள் நெடுநேரமாக விசாரித்துக் கொண்டிருக்கின்றோம். எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. நாங்கள் தேடிவந்த இடம் பிடிபடுவதாக இல்லை. நாம் விசாரித்தவுடன் இலகுவில் அடையாளங்கண்டு கொள்ளக்கூடியதாயுமில்லை.

ஆங்கில மருத்துவ முறைகளை மக்கள் நாடிச்செல்கின்ற சூழ்நிலையில், ஆயுளவேத மருத்துவ நிலையத்தை தேடிச் செல்வோர்நிலை எங்களுடைய நிலைபோல்தான் ஆகிவிடும்.

மனோகராச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதியை ஊடறுத்துச் செல்லும் மானிப்பாய் வீதியை இணைக்கும் அந்த சிறிய பாதையின் இடையே அமைந்துள்ளது நாம் தேடி சென்றஇடம்.

மேற்படி தகவல் கிடைத்ததும், நாம் உற்சாகம் அடைந்தவர்களாய் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் நிர்மலாதேவி துரைராஜா அவர்களைச் சந்தக்கும் எமது நோக்கம் கைகூடப்போவதை எண்ணியவர்களாய் மகிழ்ச்சியடைந்தோம்.

அந்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தரை சந்தித்து, அவருடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோம்.

நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது என்ற அவையடக்கத்துடன் நாம் கேட்ட கேள்விகளுக்கு அவர் விடையளித்தார். பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்ற ஆயுர்வேத மருத்துவம்பற்றி அறியும் வாய்ப்பு எமக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தோம்.

எனக்கு தற்போது 56 வயது ஆகின்றது. ஆனைக்கோட்டை கூழாவடி எனது பிறப்பிடம். அந்த இடத்தில் தற்போதும் தொடர்ந்து வசித்துக்கொண்டு வருகிறேன்.

என்னுடைய தகப்பனார் ஒரு ஆயுர்வேத வைத்தியர். அவருடைய வழித்தோன்றலாகிய எனக்கும் ஆயுர்வேத மருத்துவத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் சிறு வயதில் இருந்தே இருந்து வந்தது.

அத்தகைய ஒரு எண்ணமும், ஆர்வமும் ஆயுர்வேத மருத்துவத் தொழிலை நான் ள்ளுவதற்குக் காரணமாக இருந்தது. கய எண்ணம் மட்டுமல்லாமல் ஆயுர் மருத்துவத்தில் பக்கவிளைவுகள் துவுங்கிடையாது என்பதாலும், நான் இந்தத் தொழில்மேல் ஆர்வங் கொண்டேன் என்ற முன்னுரையுடன் ஆரம்பித்தார்.

நான் கல்விப், பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சை எடுத்துவிட்டு, உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு ஒரு தவணை படித்துக்கொண்டிருந்தேன். அப்போது (1970 ஆம் ஆண்டு) மருந்துக் கலவையாளர் வேலையில் சேர்ந்தேன். 1988 ஆம் ஆண்டுவரையும் இந்த வேலையைத்தான் செய்துவந்தேன். 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னா தான் எனக்கு ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் என்ற பதவி கிடைத்தது.

என்னுடைய ஆயுட்காலம்வரை இந்தத் தொழிலைச் செய்யலாம். அரசாங்கத் தொழிலாக இருப்பதனால், ஓய்வூதியகாலம்வரை இந்த வைத்திய நிலையத்தில் பணிபுரிந்துவிட்டு, ஓய்வூதியம் பெற்றபின்னர் தனியாக ஒரு வைத்திய நிலையத்தை வீட்டிலும் அமைத்துக்கொண்டு, வாழ்க்கையை ஓட்டலாம் என்று இருக்கின்றோன்.

ஆயுர்வேத வைத்திய முறையை நாடி தற்போது இளைஞர்களும் வந்து கொண்டிருக்கின்றார்கள். உடனடியாக மாற்றிக்கொள்ள முடியாவிட்டாலும், பெரும்பாலான நோய்களை ஆயுர்வேத வைத்தியத்தின்மூலம் முழுமையாக போக்கிக் கொள்ளலாம் என்பதே இந்த மருத்துவத்தை அநேகரும் விரும்பக் காரணமாகின்றது.

என்னுடைய மருத்துவத்துறை அனுபவத்தில் பல நோய்களை ஆயுர்வேத வைத்திய முறைமூலம் குணப்படுத்தியுள்ளதைக் கூற விரும்புகின்றேன். அதனால், அதிகளவிலான நோயாளர்கள் இந்த மருத்துவத்தை நாடி வருகின்றனர்.

ஆயுர்வேத மருந்துகள் தற்போது கொழும்பிலிருந்து வருகின்றன. முன்னர் அவை "கோபாம்" மற்றும் 'சுந்தரம் பிறதர்ஸ்' போன்ற உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் பெறப்பட்டன. A-9 பாதை திறப்பின் பின்னர் மருந்துகளை நேரடியாக கொழும்பு சென்று பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

யுத்தம் நிலவியபோது உள்ளூர் உற்பத்தியாளர்கள் மருந்துகளை உற்பத்தி செய்தனர். அவர்களின் மருந்துகளையே நாமும் விநியோகித்து வந்தோம். அவை தரமானவையாகவும் இருந்தன. தற்போது வருவதைத் தரமில்லை என்று கூறமுடியாது. எனினும் தனிப்பட்ட முறையில் மருந்து உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படாமல் போய்விட்டார்கள் என்பது குறையாகவுள்ளது.

போர் நடைபெற்ற வேளையில் கொழும்பிலிருந்து மூலப்பொருட்களை பெற்றுக் கொண்டு மருந்து உற்பத்தியை செய்யமுடியாமல் இருந்த நிலைமைகளும் உண்டு. அதாவது, கொழும்பிலும் மற்றும் வேறு இடங்களில் இருந்தும் மூலப்பொருட்கள் பெறுகின்ற வசதிகள் குறைவாக இருந்தது.

என்னுடைய வாழ்க்கை பெண்கள் தனியே வாழமுடியும் என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. சொந்தத் தொழில் ஒன்று இருக்கும் போது, மற்றவர்களின் துணையின்றி ஒரு பெண் தனியே வாழலாம். பெண்ணுக்கு கணவன் துணை அவசியம் என்ற கருத்தினை என்னால் பெரிய அளவில் ஏற்றுக்கொள்ள முடியாதென்றே கூறுவேன்.

நான் இத்தனை வயதாகியும் திருமணம் செய்யாமல் இருக்கிறேன் என்பது எனக்கு கஷ்டமாகத் தெரியவில்லை. மற்றைய பெண்கள் சிலர் குடும்பத்தில் சென்று எத்தனையோ கஷ்டங்களை அடைகின்றார். அதைப் பார்க்கும்போது, தற்போது நான் தனியே இருப்பது கஷ்டமாக எனக்குத் தெரியவில்லை.

சினிமாவின் தாக்கத்தினால் தற்போதைய சமூகம் மிகவும் சீரழிந்து வருகின்றது என்று கூறலாம். வெளிநாட்டிலிருந்து வருகின்ற பணத்தின் மூலமாக இங்குள்ளவர்கள் உயர்ந்த வாழ்க்கையை வாழவிரும்புகின்றார்கள். சினிமாவில் வருகின்ற கதாநாயகர்களைப்போல வாழமுற்படுகின்றார்கள்.

இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தக் கூடிய அரசாங்கம் தற்போது இல்லை. அப்படியான அரசு வருமாக இருந்தால் இவை இல்லாமல் போகின்ற சாத்தியங்கள் நிறைய உண்டு.

அந்தவகையில் தனியார் கல்வி நிறுவனங்களும், தற்போதைய இளஞர்கள் பொழுது போக்குவதற்குரிய இடமாக மாறிவருகின்றமையை அவதானிக்கலாம்.

ஆண்களைப் பொறுத்தவரையில் சினிமாவில் ஒழுங்காகத்தான் காட்டப்படுகின்றது. பெண்களின் உடைவிடயத்தில் காட்டப்படுகின்ற சிக்கனத்தை நமது பெண்களும் பின்பற்றுவதுதான் வேதனை அளிக்கும் விடயமாகும்.

திரைப்படத்தைப் பார்த்துவிட்டு அதேமாதிரியான சிக்கனத்தைப் பின்பற்றி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் செல்லுகின்றார்கள். அது அவர்களுக்கு பொழுது போக்கிக்கொள்ளவும், தமது சிக்கனத் தன்மையைக் காட்டவும், வாய்ப்பான இடமாக அது அமைந்துள்ளது.

ஆசிரியர் கற்பித்த பாடங்களை ஒழுங்காக கற்ற காரணத்தால் அப்போது தனியார் கல்வி நிறுவனங்கள் வேண்டியதாய் இருக்கவில்லை. தற்போது அவை வேண்டிய சூழலை ஆசிரியர்களும், மாணவர்களும் உருவாக்கிக்கொண்டுள்ளார்கள்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு ஒரு தீர்வு அவசியமானதென்று நான் கருதுகின்றேன். பெற்றோர் முதலில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும். அவர்கள் - ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாத காரணத்தால் தான் பிள்ளைகள் தவறான வழிகளுக்குச் செல்லுகின்றார்கள்.

அந்நிய கலாசாரத்தை துணைக்கு அழைத்து தப்பித்துக்கொள்பவர்களும் இருக்கின்றார்கள்.

அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அந்நிய தேசத்தில் அந்த தேசத்தின் சூழ்நிலைகள், சூழல் அமைவிடங்கள் பற்றி முதலில் உணர்ந்துகொள்ளவேண்டிய தேவை இத்தகையோர்க்குண்டு. எமது தேசத்தில் வாழும் போது, அந்தத் தேசத்திற்குரிய கலாசாரத்துடன் வாழ முற்படவேண்டும்.

தமிழர்களின் கலாசாரம் இந்த வகையில் எனக்கு பிடித்தமான ஒன்றாக இருக்கின்றது. தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் படிப்பதற்காக செல்கின்றோம் என்று கூறிக்கொள்பவர்கள் இருக்கலாம். படிக்கவேண்டும், பட்டம் பெறவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றேயாகும். ஆனால், ஒரு ஒழுங்கமைப்பு இருக்கவேண்டியது அவசியமானதாகும். அதைக்கைக்கொள்ளாத படிப்பு ஒரு பயனையும் தரமாட்டாது.

சீதனம் தொடர்பாக சொல்லவேண்டிய கருத்து என்னவென்றால் - இருப்பவர்கள் சீதனம் கொடுக்கலாம். இல்லாதவர்களிடம் எதிர்பார்க்கக்கூடாது. சீதனத்தால் திருமணம் தடைப்படும்போது, பாதிக்கப்படுவது தமது பிள்ளைகளே என்பதை அனைவரும் உணரவேண்டும்.

காதல் என்பது ஒரு புனிதமானது, தெய்வீகமானது. என்று கருதிய காலம் மலையேறிவிட்டது. காதலின் புனிதத்தன்மை தற்போது குறைந்து செல்லுகின்றது என்பதே எனது கருத்து நிலையாகும். தனித்தனி மனிதர்கள் தமது கௌரவங்களைப்பார்த்து வாழ்க்கையை சீரழித்துக்கொள்ளுகின்றார்கள். இவை மனதில் கவலையை அளிக்கின்றது.

ஆயுர்வேத மருத்துவத்தைப் பொறுத்தவரையில் அந்த மருத்துவமுறை பிறருக்கு வினக்கமில்லாத காரணத்தால், அழிந்துகொண்டு செல்கின்றது எனலாம்.

என்னுடைய அப்பா விஷக்கடி மருத்துவத்தில் மிகவும் சிறந்து விளங்கியவர். ஆனால், அவர் இன்னொருவருக்கு அந்த வைத்திய முறையை ஏனோ சொல்லிக்கொடுக்கவில்லை. ஆகையால் அவரோடு அந்த மருத்துவமுறை அழிந்துபோய்விட்டது.

என்னுடைய அப்பாவின் காலத்தில் கருடனைக்கூப்பிட்டு விஷத்தை எடுக்கின்ற ஆயுர்வேத முறைகள்கூட இருந்துள்ளன. ஆனால், அவை பிறருக்கு சொல்லிக்கொடுக்கப்படாததால் அவர்களோடு அழிந்துபோய்விட்டன.

திருமணம் புரியாத ஒரு பெண்ணைப் பார்த்து, திருமணம் புரியாது வாழ்வது பற்றி சமுகம் கதைக்கும்.

அதே சமூகம் திருமணமாகி வாழ்க்கை நடத்தும் பெண்ணுக்கு குழந்தை கிடைக்காமையைப் பற்றியும் கதைக்கும். குழந்தைகள் கிடைந்து வாழும் பெண்ணை குழநதை வளர்ப்புப் பற்றியும் கதைக்கும்.

சமுதாயத்திற்காக நாம் வாழமுடியாது. நாமே சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். என்பது அனைத்துப் பெண்களும் கொள்ளவேண்டிய கருத்தாகும் என தனது செவ்வியை நிறைவுசெய்தார்.

நேர்காணல்:- பூ.நகுலன், செல்வா

# செவிக்கு இன்பம் தருவது பேச்சு

"நீ என்ன பேசுகிறாய் என்பதை விட எதிரில் இருப்பவர் பேசுவதை நீ எவ்வளவு கவனத்துடன் கேட்கிறாய் என்பதுதான் முககியமானது" என்கிறார் பிளேட்டோ.

உரையாடல் என்பதே இருவழிப்பாதை. நாம்மட்டும் வளவள வென்று பேசி எதிரில் இருப்பவரை பேசவிடாமல் செய்தால் அது உரையாடல் ஆகாது.

பண்பான உரையாடல் அடுத்தவருடைய கருத்தையும் கூற சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். இதுதான் பண்பானமுறை.

அடுத்தவர் பேச்சைக் கேட்காமல் நாம் மடடும் பேசவேண்டும் என்றால், அவர் முன்பு கூட நின்று பேசலாம் இல்லையா?

மற்றவரின் பேச்சுக்கு மதிப்புக் கொடுததாக வேண்டும். இப்படி செய்தால் நமக்கு பல நண்பர்கள் கிடைப்பார்கள்.

நம்முடைய நண்பிகளும் நம்மைவிட்டுப் போகமாட்டார்கள். அடுத்தவருடைய பேச்சைக்கவனித்து அதற்கு ஏற்றாற்போல் பதில் கூறுவது சிறப்புத்தானே.

பல சண்டை சச்சரவுகள் எழுவதற்கு அடிப்படை பிறருக்கு சந்தர்ப்பம் அளிக்காமல் நாமே பேசிக்கொண்டு இருப்பதுதான்.

நம்முடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தால் கோபம் வரத்தான் செய்யும். கோபம் வந்தால் வார்த்தைகள் வேகமாக வந்துவிடும்.

நாம் சண்டைபோடவரவில்லை சாதாரணமாக உரையாடத்தான் வந்திருக்கின்றோம். நாமும் கத்திப்பேச ஆரம்பித்தால், சண்டையின் வாடைக்காற்று லேசாக வீசத்தொடங்கும்.

கடுமையான வார்த்தைகளும் வாயிலிருந்து வரும். சொல்லக்கூடாத தரக்குறைவான சொற்கள் பரிமாறிக்கொள்ளப்படும். இது கருத்து மாறுபாட்டின் சண்டையில் ஆரம்பமாகிவிடும். சண்டை என்று வந்துவிட்டால் வார்த்தைகள் தங்குதடையின்றிவரும்.

கொடுமையான சொற்களும் சுலபமாக வந்துவிடும். இதற்குப் பொறுப்பான முதல் ஆட்கள் நாங்கள்தான்.

நாம் தானே அடுத்தவருக்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் பேசியது! எம்மிடம் நிதானம் இல்லாதபோது, மற்றவரிடம் அதை எதிர்பார்க்க முடியுமா,

நம்மால் அடுத்தவருக்கு ஒரு காரியம் நடக்கவேண்டியிருந்தல். அப்போது நாம் பேசுவதையே பொறுமையாகக் கேட்டுக்கொணடிருப்பார்.

மற்றவரைப் பேசவிடாமல் நாமே பேசுவதானால் என்ன கிடைத்துவிடப்போகிறது? பொருள் அளவில் ஏதாவது கிடைக்கிறதோ இல்லையோ, நாம் ஒன்றைச் சாதித்தோம் என்ற ஆத்ம திருப்தியாவது கிடைக்குமா என்றால், அதுவும் கிடையாது. பின்பு ஏன் இப்படிப் பேசவேண்டும்?

சம வாய்ப்புக் கொள்கை வாக்குவாதம் தான் மிகவும் பயன்படும். நமக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை அடுத்தவருக்கும் உண்டு என்பதை என்றும் நினைவில் வைக்கவேண்டும். மற்றவருடைய கருத்



துக்கு மதிப்பளித்த பின்புதான் நம்முடைய கருத்தைக் கூறவேண்டும்

அடுத்தவருடைய வார்த்தையைக் கேட்பதற்கு நமக்கு இரண்டு காதுகள் இருக்கின்றன. நம்முடைய கருத்தைக் கூறுவதற்கு ஒருவாய் மட்டுமே உள்ளது. இதனை என்றும் நினைவில் வைத்துக்கொண்டால் போதும்.

நாம் மற்றவர்களின் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்போம். அடுத்தவருக்குப் பேச சந்தர்ப்பம் அளிக்காமல், நாமே பேசிக்கொண்டிருப்பது நாகரிகமல்ல.

நல்லூர் இளை நூலகம் மாநகராட்சி

# பிஞ்சுமுகத்தின் தேடல்

**வே**லியிலே படர்ந்துகிடந்த தூதுவளைச் செடியையே அப்பா பார்த்துக்கொண்டிருந் தார். கடந்த இரண்டு நாட்களாக ஒரே அடை மழை வெளியே போகமுடியவில்லை. அப்பா தான் எங்கள் வீட்டில் சமையல் அவருக்கு நல்லாச் சமைக்கத்தெரியும். கடலில் போய் மீன் பிடித்துக்கொண்டு வருவார். கறிக்கு இரண்டு மீன்மட்டும் வைச்சுப்போட்டு மிச்சம் முழுக்கப் பெட்டிக்காரனுக்குக் கொடுப்பார். அவன் ஒரு தாழ்காசும், கொஞ்சம் சில்ல றைக்காசும் கொடுப்பான். அப்பா அதை என்னட்டைத் தந்து 'பவளம் இதைப் பத்திர மாகக் கொண்டுபோய் தைலாப் பெட்டி யுக்கை வைமேனை' எண்டு சொல்லுவார். நான் வீட்டுக்கை சாமித்தட்டில இருக்கிற தைலாப்பெட்டிக்கை காசை வைக்கப்போக எப்பவும் பல்லி சொல்லும். 'உச்சத்துப் பல லிக்கு அச்சமில்லையாம்' எங்கடை அம் மம்மா நெடுகச் சொல்லுவா.

அம்மம்மாவை நினைத்தால் எனக்கு எப்பவும் அழுகைவரும் அவதான் எனக்கு எப்பவும் துணை எண்டு நினைச்சுக் கொண் டிருந்தன். ஆனால் என்ரை நினைப்பெல் லாமே வெறுங்கனவாய்ப்போச்சு. எனக்கு அமமம்மாவின்ர மடியில படுக்க நல்ல விருப் பம். எனக்கு அப்பஞ்சுட்டுத்தருவா. பாலப் பம், நிறையப் பால்விட்டு அதற்கு மேல பனங்கட்டித்தூள் போட்டுத்தருவா. நான் அஞ்சாறு அப்பம் சாப்பிடுவேன் 'மெது வாகச் சாப்பிடு குஞ்சு' அம்மம்மா என் முதுகைத் தடவிச் சொல்லுவா. அப்பா அதி கம் கதைக்கமாட்டார். ஆனால் அடிக்கடி போய் வேலிக்கரையில் நிற்பார். ஒரு நாள் மத்தியானம் நான் சாப்பிட்டு விட்டு ஒட்டில குந்தி இருந்தன். அம்மம்மா பனங்கட்டிக் [illegible]டான் இழைச்சுக் கொண்டிருந்தா. ஒரு [illegible]சில் சத்தம்போல ஏதோ கூவிக்கொண்டு வந்தது. நான் முற்றத்திலை இறங்கி நிண்டு வானத்தைப் பார்க்க வெளியிலை ஓடி வந் தன். அம்மம்மா என்னைத் தாவிப்பிடித்து மடியிலை புதைத்துக்கொண்டு குப்புறப்ப டுத்தா. படாரென்று பெரிய வெடிச்சத்தம். என்ரை காது இரண்டும் அடைச்சுப்போச்சு. அம்மம்மாவின்ரை கைகள் இரண்டும் என்னை இறுகப்பிடித்திருந்தன. பக்கத்து வீட்டுச் சனம் எல்லாம் கத்திக்கொண்டு ஓடிச்சுது. நான் பயத்திலை கண்ணை மூடிக்கொண்டு பேசா மல் கிடந்தன். கொஞ்ச நேரங்கழிய 'அம் மம்மா கையைவிடணை' எண்டு சொல்லிக் கொண்டு எழும்பப் பாத்தன் முடியவில்லை. தகரப் படலையைத் திறந்துகொண்டு அப்பா ஓடிவந்தார். தோளிலை கொண்டு வந்த வலைச் சுருளை எறிஞ்சுபோட்டு எங்களுக்குக்கிட்ட வந்தார். 'ஐயோ என்ரை மாமி, என்ரை குஞ்சு' எண்டு குளறியபடி அம்மம்மாவின்ரை இரும் புப்பிடியிலையிருந்து என்னை விடுவித்தார். அம்மம்மாவின்ரை உடம்பு சரிந்து கண் இரண்டும் மூடிக்கிடந்தது. அவ.... அவ.... செத்துப் போனாவாம். எனக்கு நடுக்கம் வந்தது. அப்பாவின்ரை தோளிலை மயங்கிச் சரிஞ்சன். அவ்வளவுதான்!





அம்மம்மாவை நான் பார்க்கவேணும் சிணுங்கும் குரலில் நான் கேட்கும்போதெல் லாம் அப்பாவின் முகம் கறுக்கும் வேலியைத் தான் பார்ப்பார். பக்கத்து வீட்டு மாமிதான் அப்பா கடலுக்குப் போய்த் திரும்பிவரும் வரை எனக்குத் துணை அவதான் எனக்கும் என்ரை அம்மாவைப் பற்றிச் சொல்லுவா. 'பவளம் உன்ரை அம்மா இந்த உலகத்தில ஒரு பாவப்பட்ட பிறப்படி! வாய்பேசமுடியாமல் அவள் பிறந்ததும் பாவம்'

என்ரை அம்மா வாய்பேசமுடியாத அங் கக்குறைபாடு கொண்டவள் என்பதை அன்று தான் நான் முதன்முதலாக அறிந்துகொண் டேன். எனக்கு என்ரை அம்மாவைத் தெரியாது. முகமும் நினைவில்லை நான் ஆறுமாதக் குழந்தையாக இருந்தபோது காணாமல் போய்விட்டாளாம். இராணுவத்தினரால் இழுத்துச்செல்லபபட்டு விசாரணைசெய்ய அம்மா என்ன செய்தி ருப்பாள்? மாமி சொன்னாள் மூக்கும் முழி யுமாய் அம் மன் சிலை போல இருப் பாளடி! நீயும் வளர்ந்தால் அவளைப் போலத தானடி வருவாய்! இராணுவ முகா மிலை நான போய் அம்மாவைப் பற்றிக் கேட்டால் என்ன! நான் மனதுக்குள் திட்டம் தீட்டினேன். நான் பள்ளிக்குப்போகும் வழியில் ஒரு முகாம் இருகது அப்பா என்னைச் சைக்கிளில் தான் கூட்டிக்கொண்டு போவார். நான் தனியப்போய் விசா ரிக்கவேண்டும். அந்த நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தேன். என்னு டைய விருப்பம் நிறைவேறவில்லை அந்த முகாம்போன கிழமை இடம் மாறிவிட்டது. என்ன செய்யலாம்? முகம்தெரியாத என் அம்மாவை மன துக்குள்ளே மெல்ல அழைத்தேன்! அம்மா! நீ என்னைத் தேடி வரமாட் டாயா?...

நேற்று அப்பாவோடை மாரியம் மன் கோவிலுக்குப் போனேன். என்ரை பிறந்தநாளாம். அப்பாதான் புதுச் சட்டை வாங்கித்தந்தார். கோவிலில் கூட்டமில்லை. நான் மாரியம்மனை நல்லவடி வாகப் பார்த்தேன். சிவப்புச் சேலையும், நகை யும், நட்டுமாய் அம்மன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு மனதுக்குள் சந் தோஷம் பொங்கிவந்தது. கையை நெஞ்சில் குவித்துக் கண்ணை மூடினேன். பவளம்!.... அப்பா கூப்பிட்டார். கையில விபூதியும் சந்தண மும் கிடந்தது. நெற்றி நிறையப் பூசிவிட்டார். நல்லவேளை நான் பாதுகாப்பாகக் கண்ணை மூடியதால் கண்ணுக்குள் விழவில்லை. கோவில் வெளிவீதியில் சுற்றிவரும்போது, ஒரு ஆலமரம் - பெரியமரம் அப்பாவிடம் சொன்னேன். 'கொஞ்ச நேரம் .இதிலை இருப் பமே! அப்பா உடனே இடுப்பிலை கட்டியி ருந்த தன்ரை சால்வையை நிலத்தில் விரித்து விட்டார். நான் மரத்தடியில் இருந்த பெரிய வேரில் போய் இருந்தேன். அப்பா எனக்குப் பக்கத்தில் விரித்த சால்வையில் மெல்லச் சாய்ந்து படுத்தார். கண்ணை மூடினார். நான் அவரையே பார்க்கின்றேன்...

அப்பா இப்போது கொஞ்சம் மாறிவிட்டார். உடம்பு இளைத்துவிட்டது. அப்பாவைச் சிரிக்க வைக்க என்ன செய்யலாம் மாமி சொன்னது நினைவுக்கு வருகிறது. 'நீயும் வளர்ந்திட்டாய், உன்னை நினைச்சுத்தான் மேனை அவன் கவலைப்படுகிறான். இப்ப கடல் தொழிலும் கஷ்டமாய்போச்சு வெளியாலையோய் ஏதும் தொழில் செய்யலாம் எண்டால், உன்னை என்ன செய்யிறது... மாமி நீட்டி முடக்கிச் சொன்னாள் நான் அப்பாவுக்கு எப்படி உதவி செய்யலாம்? அப்பா கண்ணைமுழித்து என் னைப் பார்த்தார். 'பவளம் உன்னை ஒரு பாதுகாப்பான இடத்தில விட்டிட்டு நான் வேறு தொழில் தேடிப் போகநினைக்கிறேன். ஆனால், என்னை விட்டிட்டு நீ எப்படி இருப்பாய்...' அப்பாவின் குரல் கரகரத்தது. அம்மா நீ எங்கே போனாய்! நீ எங்களோடு இருந்தால் இப்ப பிரச்சினை இருக்காது என்ரை மனதுக்கை என்னவோ செய்தது முகமறியாத அம்மாவைப் பற்றி அப்பாவிடம் கேட்கலாமா?

அப்பா சொன்னார்! பவளம் உன்ரை அம்மா எங்களைவிட்டுப் போகாவிட்டால் எவ் வளவு நல்லது. எட! என்ரை மனதுக்கை நினைச்சதை எப்படி அப்பா கண்டுபிடித்தார். என் மனம் துள்ளியது. அம்மாவைப் பற்றி நானும் அப்பாவும் சேர்ந்து யோசிக்கிறோம்... பக்கத்தில் வீதியில் ஒரேகூச்சலாக இருந்தது. சிறுவர், சிறுமியர் புடைசூழ ஒரு பைத்தியம் வந்துகொண்டிருந்தது. கந்தல் புடைவை, எண்ணெய்காணாத பரட்டைத்தலை. முக மெங்கும் விபூதிப் பூச்சு, நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு, வாயிலிருந்து பொருளற்ற ஒலிகள் நான் அந்த உருவத்தை வியப்புடன் பார்த்தேன். அப்பா வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தார். பைத்தியம் அப்பாவை நோக்கிக் கைகளை நீட்டியபடி வந்தது. அப்பா என் கையைப் பிடித்துக் கொண்டு சைக்கிளை நோக்கி ஓடினார். பைத்தியம் வேகமாக ஓடி வந்தது. சிறுவர்களும் பின்தொடர்ந்து வந்த னர். பாவம்! திடீரெனப் பைத்தியம் புடைவை தடக்கிக் கீழேவிழுந்தது. எனது வாய் ஐயோ! அம்மா! என்று அலறியது அப்பாவின் கையைப் பறித்துக் கொண்டு பைத்தியத்தின் அருகில் ஓடிவந்தேன். கையைப்பிடித்துத் தூக்க முயன் றேன் எனது வலதுகையால் அந்தக் கைக ளைத் தொட்டபோது அம்மன் சிலையைத் தொட்டதுபோல மனதுக்குள் சந்தோஷம் பொங்கி எழுந்தது. கண்ணில் நீர் முட்டியது. அந்தக் கைகள் என்கைகளை இறுகப் பற்றிக் கொண்டன. சூழநின்ற சிறுவர் வியப்புடன் விலகாமல் நின்றனர். அப்பா வந்தார. அந்தப் பரவசம் தந்த கைகைளைப் பிரிதது என்கைக ளைப் பற்றி இழுத்துக்கொண்டார். அவர் நடை யின் வேகத்திற்கு என் கால்கள் ஓடத்தொடங் கின. 'அப்பா சொன்னார்! உன்னை நாளைக்கே இல்லத்திலை விட்டால் நல்லது. நான் திரும் பிப் பார்த்தேன். அந்தப் பைத்தியம் எங்களையே பார்த்துக்கொண்டிருந்தது. என் மனம் ஒரு முடிவுக்குவர 'அப்பா நான் நாளைக்கு இல்லம் போகிறேன்' என்று வாய்சொன்னது. கண்க ளில் நீர் திரண்டது. அதற்குள்ளே அம்மா!!...

# உடல் பருமனை மூலிகையால் குறைக்கலாம்

இப்போதெல்லாம் ஏராளமாக ஆண்- பெண்கள் பல்வேறு நோய்களின்பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்களில் பெரும்பா லானவர்கள் உடல் பருமனால்தான் அதிகம் பாதிக்கப்பட்டு இருப்பதாகப் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

இளைஞர்கள் பலருக்கு - பருமன் காரண மாக அவர்களது திருமண வாழ்க்கை தடை படுகிறது. எதிலும் தன்னம்பிக்கை குறைந்து மந்தமான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின் றார்கள்.

உடல் பருமனை ஆரம்பத்திலேயே குறைத்து விடவேண்டும். வயது கூடக்கூட பலவிதமான உடல் உபாதைகளும், வலிகளும் ஏற்படுகின் றன என்கிறார்கள் வைத்தியர்கள்.

உடற்பயிற்சி செய்தும். அளவுக்கதிக மான உடல்பருமன் குறையவில்லை என்றால், மூலகைகளை பயன்படுத்துவது நல்லது. இத னால மிக எளிதில் உடல் பருமனைக் குறைத் துவிடலாம்.

உணவுக் கட்டுப்பாடு என ஒரேயடியாக பட்டினி கிடந்தாலும், உடல் பலவீனமாகிவடும். உணவுக்கட்டுப்பாட்டை மீறி, கண்டபடி சாப் பிட்டாலும் ஆபத்துத்தான்! அதனால் சத்து அதிகம் இல்லாத உடலின் பருமனை மட்டும் கூட்டக்கூடிய உணவுவகைகளைத் தவிர்த்து உடலுக்கு நல்ல பலமும், சக்தியும் தரக்கூடிய சத்துள்ள சமச்சீரான உணவு முறையை ஒவ் வொருவரும் கடைப்பிடிப்பது அவசியம்.

இதற்கான ஆலோசனைகளைப் பார்க்கும் சில ஆண்- பெண்களுக்கு இடுப்பு, வயிறு போன்ற பகுதிகளிலும், தொடைகளிலும் அதி மாகத் தசை இருக்கும் இப்படிப்பட்டவர்களுக் கான பயிற்சி முறைகள் பற்றிப்பார்த்தால்.

நிறையைக் குறைக்க சைக்கிள் ஓட்டும் பயிற்சி செய்யலாம். இது உடல் உறுப்புகள் அனைத்தையும் ஒருமித்த நிலைக்குக் கொண் டுவரும். நம் உடலிலுள்ள நரம்புகள் எல லாமே பாதங்களில் முடிச்சாக முடிவதால், அடுத்த சிகிச்சை கால் பாதங்களுக்குத் தான்.

மேசின்மூலம் பாதங்களில் தரப்படும் சிகிச் சையால் உடலிலுள்ள அத்தனை நரம்புகளை யும் தூண்டிவிடுகிறது. பிறகு பெல்லிரோலர் எனப்படும் கருவியை அதிகப்படியான தசை நிறைந்த பகுதிகளில் சூழலவிட, அடர்ந் துள்ள கட்டியான கொழுப்பு நீங்கிவிடும்.

கூடுதலான கொழுப்பை மூலிகைக் குளி சைகள்மூலம் வியர்வையாக வெளியேற்று கின்றது. இப்படி தொடர்ந்து 2 அல்லது 3 மாதங்கள் வாரம் ஒருமுறை செய்யதுவர உடல் எடுப்பான தோற்றம்பெறும்.

பரம்பரையாக உடல் பருமன் உள்ளவர்க ளுக்கும். வளைவு, நெளிவே இல்லாமல் தலைமுதல் கால்வரை ஒரே மாதிரியான பரு மனுடன் வடிவம் இல்லாதவர்களும்கூட இந்த சிகிச்சைமூலம் வடிவம் பெறமுடியும்.

சில பெண்களுக்கு எவ்வளவுதான் உடற் பயிற்சி செய்தாலும், தலைவலி, தும்மல் வாயுகோளாறுகள் இருககலாம். இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிறகுதான் இந்தச் சிகிச்சைகளைச் செய்யலாம்.

கர்ப்பபை நீக்கம் போன்ற அறுவை சிகிச் சைகள் செய்துகொண்ட பெண்களும் அறு வைச்சிகிச்சை முடிந்து 3 மாதங்களுக்கு பிறகு இந்தச் சிகிச்சையை பெறலாம். உடல் இளைக்கும்போது சுருக்கங்கள் வருவது இயற்கையே இதனை நீக்குவதற்கும் சிகிச்சை கள் தரப்படுகிறது.

மூலிகை எண்ணெயைத் தடவி மசாஜ் செய்ய சுருங்கிய தசைகள் அழகுபெறும் இந்த சிகிச்சைகள் எல்லாமே பெண்களுக்குத் திறமை வாய்ந்த மற்றும் சிறப்புப் பயிற்சி பெற்ற பெண்களாலேயே கொடுக்கப்படுகின் றது.



## பப்பாளிப்பழத்தின் பயன்கள்

- ★ பப்பாளிப்பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்குக் கொடுத்துவர, உடல் வளர்ச்சி துரிதமாகும். அத்துடன் எலும்பு வளர்ச்சி, பல் உறுதி என்பன ஏற்படும்.
- ★ பப்பாளிப்பழத்தை சாப்பிடுவதால் கல்லீரல் வீக்கம் குறையும்.
- ★ பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டுவர நரம்புத்தளர்ச்சி குறையும்.
- ★ குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களுக்குப் பப்பாளிப்பாலை பூசிவர புண்கள் விரைவில் ஆறும், வாய்ப்புண் குணமாகும்.
- ★ நன்கு பழுத்த பழத்தை கூழாகப் பிசைந்து தேன்கலந்து முகத்தில் பூசி ஊறியபின் சுடுநீரால் கழுவிவர முகச்சுருக்கம் நீக்கி, முகம் அழகுபெறும்.
- ★ பப்பாளி விதைகளை அரைத்து தேள்கடித்த இடத்தில் பூசினால் வலி, விஷம் இறங்கும்.
- ★ பப்பாளிக்காயை குழம்பு சமைத்து உண்பதால் பிரசவித்த பெண்களுக்கு பால்சுரக்கும்.

# இந்த வார பலன்கள்

## 27.02.2004 - 04.03.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சுக் | ராகு செவ் | சந் | சனி |
| யுரே சூ. புத | 29 ப. 1.50 மே -சுக்<br>29 ப. 3.55 மிது-சந்<br>02 பி.இ. 3.32 கட-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சஞ்சலங்கள் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை சிறுபிணக்குகள் தோன்றலாம். பண வருவாயிலும் பார்க்க செலவுகள் கூடுதலாக இருக்கும். தேகசுகக்குறைவுகாணும். வைத்தியச் செலவும் அதிகமாகும். உறவினரிடையே ஒற்றுமைக்குறைவு காட்டும். குடும்ப பெண்கள் மத்தியில் நிம்மதிக்குறைவும் சஞ்சலமும் ஏற்படும். திருமண முயற்சிகள் அலைச்சலைத் தோற்றுவிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய் கூடுதலாக இருப்பினும் நிம்மதியின்மையையே தரும். பிரயாண அலைச்சல் கஷ்டத்தைக் கொடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் நற்பலன்தரும். மாணவர்கள் பொழுதுபோக்கு விடயங்களில் கவனம் செலுத்துவர். முன்னேற்றத்துக்கு கூடிய முயற்சி தேவை.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியினருக்கு ஏழரைச்சனி பிற்பகுதி நடப்பதால் தொழில்முறையில் சிக்கல்கள் இருக்கும். சிறு பிரச்சினைகூட பெரிதாக வடிவமெடுத்து குழப்பங்களைக் கொடுக்கும். குடும்பத்தில் மனநிம்மதிக் குறைவும், கருத்து வேற்றுமைகளும் தோன்றும். குடும்பப்பெண்கள் திருப்தியற்று மனவிரக்தியுடன் காணப்படுவர். அன்றாடச் செலவுகளும் வரவை மிஞ்சிப் போய்க்கொண்டிருக்கும். திருமணப்பேச்சு காலந்தள்ளிப்போகும். எந்தக்கருமமும் திருப்தியாக நிறைவேறமாட்டாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும் பொறுப்புகளும் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளின் வெறுப்பைத் தேடிக்கொள்ளாது அவதானமாகச் செயற்படல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையைக் காட்டும். புதிய முதலீடுகள் ஒப்பந்தங்களைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

மிதுனராசிக் காரருக்கு இவ்வாரம் தொழில் வளம் நன்றாக இருக்கும். தேவைக்கேற்ப வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் அந்நியோன்னியம் நன்றாக அமையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் வருவாயும்கிட்டும். இனபந்துக்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சிநிலவும். குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமண காரியங்கள் நிச்சயிக்கப்படலாம். அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ளவேண்டியிருக்கும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடன் பணிகளில் ஈடுபடுவர். சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு முன்னேற்றமான பலன்களுக்கு குறைவில்லை. வங்கிநிலைகளும் நன்று. மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காணபர். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்கு தொழிற்துறையில் பிரயாசை அதிகமாகும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும் வீண்பிரச்சினைகளும் தோன்றலாம். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வருமானம் போதாமலிருக்கும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகளும் தலைதூக்கும். தேக சுகம் பாதிப்படைவதால் மருத்துவச்செலவு அதிகமாகும். குடும்பப்பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையையே காட்டுகிறது. உறவினர்களாலும் பல தொல்லைகள் ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைக் கடினம் அலைச்சல் என்பன காட்டும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிட்டாது. மேலதிகாரிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையைக்காட்டும். கடன தொகைகள் அறவிடுவதில் சிரமம் இருக்கும். மாணவர்கள் அக்கறை குறைந்தவர்களாகக் காணப்படுவர் முயற்சிதேவை.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சங்கராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்துறை நன்றாக இருக்கும். பணவரவும் தேவைக்கேற்பகிடைக்கும். உறவினர்கள் நண்பர்களின் வருகை அதிகமாக இருப்பதுடன், அவர்களால் உதவிகளும் கிட்டும். பணச் செலவும் அலைச்சலும் உண்டு. குடும்பப் பெண்கள் தேவையறிந்து நிதானமாக செலவு செய்தல் நன்று. தேகாரோக்கியம் பற்றி கவனம் தேவை. திருமணப்பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும். தூரதேசப்பயணங்கள் சற்று தாமதத்துடன் அனுகூலமாகும். உத்தியோகத் துறையினருக்கு தொழில் சுமை கூடுதலாக இருக்கும். சக ஊழியருடன் அவதானமாக நடந்து கொள்ளல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே நடைபெறும். வாடிக்கையாளர்களை அணைத்துக் கொள்ளல் நன்று. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியினருக்கு இவ்வாரம் நன்மையான பலன்கள் அமையும். தொழில் நன்றாக நடக்கும். பணவரவும் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையுடன் காணப்படுவர். கணவன் மனைவியிடையே அந்நியோன்னியம் நன்றாகப் பேணபபடும். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவு பெறும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் கருமமாற்றுவர். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் கைகூடலாம். திருமணப்பேச்சுக்கள் தாமதத்தின் பின் நிறைவேறும். தேகாரோக்கியம் நன்கு அமையும். உத்தியோகத்தர்கள் அநேகமானோர் பதவி உயர்வு சம்பள உயர்வு பெறுவர். சிலருக்கு திருப்தியான இடமாற்றம் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகள் ஒப்பந்தங்கள் அமையலாம். மாணவர்கள் தமது ஊக்கத்தால் சிறப்பான பலன்கள் காண்பர்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியில் பிறந்தவர்கள் இவ்வாரம் நன்மையான பலன்களையே கூடுதலாகக் காண்பர். தொழில், வருவாய் என்பன சிறப்பாக அமையும். குடும்பஸ்தர்கள் ஒற்றுமையுடன் வாழ்கை நடத்துவர். நண்பர்கள் உறவினர்களால் உதவிகள் கிடைக்கலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் காணப்படுவர். தனித்தொழில புரிவோர் சிறந்த வருவாயுடன் தொழில் நடத்துவர். இல்லறததில் இணைய விரும்புவோருக்கு காலம் கனிநதுவரும். உத்தியோகத்தர்கள் நிம்மதயுடன் பணியாற்றுவர். சிலருக்கு தொழில் சம்பநதமாக அந்நியநாடு செல்லும் வாய்ப்புண்டு. வர்த்தகர்களுக்கு இவவாரம் மிகச்சிறப்பாக அமையும். பணம சேரும. மாணவர்கள் சிறப்பான முன்னேற்றம் காண்பர். உயர் கல்விக்கும் செல்ல வாய்ப்பு ஏற்படும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

வருச்சிகராசிக் காரருக்கு தொழில்களில்கூடிய பிரயாசை ஏற்படும். முயற்சிக்கு ஏற்றளவு வருவாய் கிடையாது. குடும்பத்தில் சிறு தகராறுகள் தோன்றலாம். கொடுக்கல் வாங்கல்களும் கஷ்டங்களைக் கொடுக்கும். தேகநிலை பற்றி கூடிய கவனம்தேவை வைத்தியச் செலவுகளும தன்னையறியாமல் அதிகமாகப்போகும். குடும்ப பெண்களுக்கு பொறுப்புக்கள் வேலைப்பழு அதிகமாக இருக்கும். திருமணப்பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு, அலைச்சல் கூடுதலாக இருக்கும். பொறுப்புக்களும் அதிகமாகும். சக உதவிகள் கிடையாது. எதிலும் நிதானம் தேவை. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே காணப்படும் முதலீடுகளை மிகவும் சிரமப்பட்டே விற்பனையாக்கவேண்டும். மாணவர்களுக்கு கூடிய முயற்சியும், ஊக்கமும் தேவை.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுராசியினருக்கும் இவ்வாரம் கூடுதலான பிரச்சினைகளைக் கையாளவேண்டியிருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறைவாகவே காணப்படும் மனைவி, புத்திரர்களால் செலவுகள் அதிகரிக்கும். பொருளாதார நிலையல் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கும். குடும்பப்பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். தேகசுகம, குடும்பசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர் தொழில் சம்பந்தமாக அதிக அலைச்சல் மேற்கொளளவேண்டியிருக்கும். இருப்பினும் தொழிலில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் பழைய கடன்களை வசூல் செய்வதில் தாமதம் காணும் மாணவர்கள் உற்சாகம் குன்ற அசதியுடன் காணப்படுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமை, கலந்த பலன்கள் ஏற்படலாம். குடும்பத்தில் ஒற்றுமையும் அந்நியோன்யமும் ஏற்படும். தொழிலல் வேலைப்பளு கூடுதலாக இருப்பினும் ஏற்ற வருவாய் கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பப் பெண்கள் பொறுப்புடன் நடந்து கொள்வர். கொடுக்கல் வாங்கல்களில் அதிகம் சிரமம் இராது. முன்பு தாமதப்பட்டிருந்த திருமணப் பேச்சுக்கள் கைகூட வாய்ப்புண்டு. தேகாரோக்கியத்தில் கூடியகவனம் செலுத்தவேண்டும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூடலாம். உததியோகத்திலுள்ளவர்கள் உற்சாகத்துடனும் சக உத்தியோகஸ்தர்களுடனும் சிறப்பாகப் பணியாற்றிப் பாராட்டைப் பெறுவர். சம்பள உயர்வுகள் சிலருக்குக் கிடைக்கலாம். வர்கத்தகர்களுக்கு கூடியலாபம் கிடைக்கும். புதிய வாடிக்கையாளரகள் வந்து சேருவர். மாணவர்கள் கல்வியில் ஊககத்துடன் செயற்படுவர். நல்ல முன்னேற்றமுண்டு.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு பல நன்மையான பலன்கள் இவ்வாரம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் நல்லுறவும் காணப்படும். இனபந்துக்கள் வெளிநாட்டிலிருந்து வருவர். தொழில் சிறப்பாக நடக்கும். பொருளாதாரம் செலவுக்கேற்ப திருப்தியாக அமையும். வீட்டில் மகிழ்ச்சி ஆரவாரம் காணப்படும். பலர் புதிய பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஈடுபடுவர். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் திருப்தியாகக் காணப்படுவர். இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோருக்கு கருமம் வெற்றியளிக்கும். உத்தியோகத்தினருக்கு நல்ல முன்னேற்றமுணடு. சகபணியாளர்களின் உதவியுண்டு. சிலருக்கு வேதனம் உயர்வடையலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். தேங்கியிருந்த சரக்குகள் விற்பனையாகி, கூடிய இலாபம் கிடைக்கும. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், நற்பெறுபேறுகளையும் பெறுவர். பலராலும் பாராட்டப்படுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

இந்த ராசிக்காரருக்கு நற்பலன்கள் குறைவு. குடும்பத்தில் இடையிடையே தகராறுகள் ஏற்படலாம். தொழிலில் சோர்வும், ஊக்கக்குறைவும் இருக்கும். தொடஙகுங் கருமங்களில் தாமதம், வீண்விரயம் காட்டும். குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பொருளாதாரம் போதாமல் இருக்கும். குடும்பப் பெண்கள் மனவிரக்தியுடன் காணப்படுவர். வெளிநாட்டிலிருந்து கிடைக்கவேண்டிய உதவிகள் உரிய நேரத்துக்கு கிடையாமல்போகும். திருமணத்துக்கான ஏற்பாடுகள் தாமதமடையும். தேகசுகக் குறைவினால் வைத்தியச்செலவு கூடுதலாகும். உத்தியோகத்தர்களுக்கு பணிகளில் மாற்றங்கள் ஏற்படலாம். வேலைப்பழுவும்கூடும். வர்த்தகர்களுககு வியாபாரத்தில் மந்தநிலை காட்டும். போட்டி, பொறாமை அதிகரிக்கும். வங்கிநிலை திருப்திதராது, புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு கல்வியில் கவனக்குறைவு தென்படும். வீண் பொழுதுபோக்குகளைத் தவிர்க்கவும்.

**பொருண்மியம்** - சுகிதன், லண்டன் -

# பொருளாதார முன்னெடுப்புக்களை மேம்படுத்த வேண்டிய காலம்

இன்றைய உலக அரசியல் அமைப்புக்கள் எல்லாம் பெருளாதாரத்தை அடிப்படையாக வைத்தே நகர்த்தப்படுகின்றன. பொருள் 'ஆதாரம்' எந்தளவு என்பதைவைத்தே நாடுகளின் பலமும், செல்வாக்கும் இன்று கணிக்கப்படுகின்றது. அரசியல் யாப்புத் திட்டங்களை மையமாக வைத்து தீட்டப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள், இன்று உலகில் சிதறடிக்கப்பட்டுள்ளன. பழைய சோவியத் ஒன்றியத்தின் நிலையும் இதுதான். அமரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்களது பொருளாதார மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டே, அரச ஆளுமைகளை நடத்திவருகின்றன. அவர்களின் அரசியல் வெற்றிக்கு பொருளாதாரத்திட்டங்களே வழிவகுத்துள்ளன.

மனிதனின் அடிப்படைத் தேவைகளான- உணவு, உடை, உறையுள் என்பனகூட இல்லாது, இன்று உலகில் பல நாடுகள் இருக்கின்றன. பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கின்றபோதும், அரசியல் திட்டங்களை மாற்றிமாற்றி வரைந்து தங்கள் நாட்டை மேம்படுத்தலாம் என முயல்வதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. மக்களின் தேவைகைள் அறிந்து அரசாட்சி புரிவது அறனாகும். ஆதிக்கத்தை செலுத்தி, உடமைகளைப் பறிக்கும் காலங்கள் இனியும் ஈடேறமாட்டாது என்ற கருத்தைத் தழுவிநிற்கின்றது இன்றைய உலக நடப்பு.

ஈழவர் பொருளாதாரத்தை சற்றுப் பார்ப்போம் -

ஒரு காலத்தில் ஈழவர் பொருளாதாரமும் தன்னிறைவடைந்திருந்தது எனச்சொல்லாம். அன்றைய தன்னிறைவு என்பது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து, அமைதியான வாழ்க்கையை நடத்தப்போதுமானதாக இருந்தது. அந்நியர் வருகையின்பின் கலாசார பண்பாடுகளில் மட்டுமன்றி, பொருளாதாரத்திலும் பெரும் திருப்பம் ஏற்பட்டது. மாறுபட்ட பொருளாதார அசைவுகளுக்கு மக்கள் முகங்கொடுக்கலாயினர். புதிய வேலைத்திட்டங்கள், நிர்வாக அமைப்பு முறைகள், பல வகைப்பட்ட வரி அறவீடுகள் என்பன அன்று எம்மவருக்கு புதிதாகவே இருந்தன. இந்த மாற்றங்கள் ஏற்படுத்திய விளைவுகள் பல நன்மைகளையும் மாறாகத் தீமைகளையும்கூட ஏற்படுத்தியுள்ளன.

அன்று எமக்கு பதிய நவீன தொழில் நுட்ப சிந்தனைகள் இருந்ததில்லை, மாறாக மெஞ்ஞான தத்துவ சிந்தனைகள், இறை அருள் பெறும் தத்துவ மார்க்கங்கள், இயற்கையை மாற்றாத வாழ்வியலே அன்று இருந்தது. இந்த நிலையில் மாற்றான் படையெடுப்புக்கள், அந்நியர் வருகையின் தாக்கம் என்பன அன்று எம்மக்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின. புதிய கல்வித்திட்டங்கள், தொழிற்துறை அமைப்புக்கள் எம்மை திசைதிருப்பின. இன்றும் அவ்வழி முறையிலிருந்து நாம் மாறுவது கடினமாகவே உள்ளது. எமது கண்டுபிடிப்புகளும், தொழிற்துறைகளும் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே தேங்கியுள்ளன. இவை மாற்றப்பட வேண்டிய காலமிது. படித்தால் ஒரு வைத்தியனாகவோ, பொறியியலாளராகவோ, கணக்காளராகவோ அல்லது ஒரு ஆசிரியராகவோ வரவேண்டும் என்ற நோக்கமே எம் மனதில் விரிவாகப் பதியப்பட்டுள்ளது. இநதச் சிந்தனைகளுடன் நாம் என்னத்தை கண்டுபிடித்து சாதித்து விட்டோம் என்கின்ற கேள்விகள் இன்று எம்மிடத்தில் உள்ளன.

எம்மவர்கள் கண்டுபிடிப்புகள் எல்லாம் மிகக் கூடுதலாக உணவுப் பொருட்களேயாகும். எமது கண்டுபிடிப்புக்களைப் பார்ப்போமாக இருந்தால் - ஆரம்பிக்கப்படும் இடத்தின் பெயருடன் பொருட்களுக்கு முத்திரை குத்தப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

பருத்தித்துறை வடை, தாவடிப்புகையிலை மட்டக்களப்புத் தயிர், தோலகட்டி நெல்லிரசம், சின்னப்பு கிரந்தி எண்ணெய், கூவில் பனங்கள்ளு, மீசாலை மாம்பழம், பூநகரி மொடடைக்கருக்கன் அரிசி, மயிலிட்டி சுறாமீன், வரணிப்பனங்கட்டி, மிருசுவில் மிளகாய், கச்சாய் காப்பிலை பொயிலை, சின்னப்பு நோ எண்ணெய், ஆனைக்கோட்டை நல்லெண்ணெய், மட்டுவில் கத்தரிக்காய், பனாட்டுக்குப் பனங்காடு, நோவுக்கு புக்கைகட்ட ஒட்டகப்புலம், உளைவுக்கு மீசைக்காரத் தைலம், வல்வெட்டித்துறைச் சோடா என்று குறிப்பிடலாம்.

மேற்கொண்டு புதிய உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் அளவுக்கு மூலதனமோ, தொழில் நுட்பமோ, பொருளாதராமோ, எல்லாவற்றிற்கும் மேலாக தேவைகளோ இருந்தது இல்லை. இன்று உலக நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்புகள் விஸ்தீரணம் அடைந்ததால், வாழவியல் மட்டுமன்றி, தேவைகளும் பாவனைகளும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இன்று தொழிற்துறைகள் பல ஆயிரக் கணக்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்துத் துறைகளிலும் நாம் கால் பதிக்காவிட்டால், சில துறைகளில் அங்கவீனராகவே இருக்க வேண்டிவரும். எனவே இன்றைய காலத்தின் கட்டாயம் கருதி, நாங்கள் சிலவற்றை மாற்றிச் செப்பனிடவேண்டும்.

அரசின் அடக்குமுறை அரசியலினால் உருவாக்கப்பட்ட ஈழப்போரின் தாக்கத்தினால், இன்று பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் உலகின் பல்வேறு பாகங்களிலும் காலூன்றியுள்ளனர். ஐரோப்பிய, வட அமெரிக்க, அவுஸ்ரேலிய நாடுகளின் நடைமுறைகள் இவர்களுக்குப் புதிதாக இருந்தாலும், இந்த நாடுகளின் நடைமுறைகள் இவர்களுக்கு இன்று இலகுவாகவே இருக்கின்றது. காரணம் 443 வருடங்கள் ஐரோப்பிய ஆதிக்கத்தில் இலங்கை பகுதியாகவும் (1505 - 1915), பின்பு 33 வருடங்கள் முற்றாகவும் உட்பட்டிருந்தால் அன்னியரின் நடவடிக்கைகள் இன்று எமக்கு புதியவையல்ல.

கடந்த 20 வருடங்களில் மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு வந்த ஈழவர்கள் - முதலில் அடியெடுத்து வைத்த இடம் உழைப்பு (பொருளாதாரம்), மற்றையது படிப்பு (கல்வி). இன்று இவர்கள் இவ்விரண்டிலும் மிக வேகமான வளர்ச்சிப் போக்கை கொண்டுள்ளமை எதிர்காலத்தில் பாரிய பொருளாதாரத் திட்டங்களையும் தொழில் நுட்ப வளர்ச்சியையும் உலகரீதியில் ஏற்படுத்த வழிவகைகள் உள்ளன. இருப்பினும் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் நாம் ஒரு கட்டமைப்பின்கீழ் வராவிட்டால், தனிப்பட நாங்கள் உயர்வான வாழ்க்கைத் தரத்தை எட்டியுள்ளபோதும், ஈழவர் என்று பார்க்கும் அளவுக்கு எம் அடையாளத்தை எதிர்காலத்தில் உலகிற்கு காட்டிவிட முடியாது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதுபோல் நாம் இன்று வலுவாக இருக்கின்றபோது ஒன்றிணைந்த பொருளாதாரத் திட்டங்களை ஏற்படுத்துவோமாக இருந்தால், அரசியலில் செய்ய முடியாத காரியங்களைப் பொருளாதார பலத்தை வைத்து ஈடேற்றிவிட இன்று எமக்கு உலகில் வாய்ப்புக்கள் அதிகம். இழந்த உரிமைகளையும், உடமைகளையும்பெற பொருளாதார வலுக்கட்டமைப்புக்களை நாம் முன்னெடுக்கத் தகுந்ததும் முடியுமானதுமான காலம் இதுவே.

உலகின் சனத்தொகையில் இரண்டாவது

(10 பக்கம் பார்க்க...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நனவினான் நல்லாக் கொடியார் கனவினான்*
*என்எம்மைப் பீழிப் பது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தல் மீதான சர்வதேசக் கவனமும் தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையும்

என்றுமில்லாதவாறு எதிர்வரும் பொதுத்தேர்தலானது சர்வதேசத்தின் கவனத்தை மிகவும் ஈர்த்துள்ளது என்றால் அது மிகையில்லை. 1975 க்கு பின்னான - இலங்கையில் நடைபெற்ற - சகல தேர்தல்களும் ஏதோ ஒரு வகையில் நெருக்கடியான சூழ்நிலைக்குள் - பதற்றத்திற்கும், பீதிக்கும் இடையிலேயே நடந்தேறியுள்ளன. ஒவ்வொரு தேர்தல் முடிவிலும் அமைதியான வாக்களிப்பு நடைபெற்றதென செய்திகள் வந்தாலும், தேர்தல் காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள், வன்முறைகள், ஆள்மாறாட்டங்கள், மோசடிகள், தில்லுமுல்லுகள் ஆகியவற்றின் தொகையையும், தன்மையையும் பார்த்தால் இலங்கை ஜனநாயகம் என்பது எத்தகைய பல வீனமான அல்லது கேலிக்குரியதான நிலையில் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

ஒவ்வொரு தேர்தலின்போது மேற்குறிப்பிட்ட தேர்தல் முறைகேடுகளின் வீதமானது அதிகரித்து வந்துள்ளதேயன்றி குறைந்து வந்தது கிடையாது. இதுவும் இலங்கையின் அரசியல் நாகரிகம் என்பது, ஜனநாயக உரிமைகளை மதிக்காத, அதிகார வெறியும், பதவி மோகமும் கொண்ட அரசியல் தலைமைகளால் தொடர்ந்து அவமதிக்கப்பட்டு வந்ததையே உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

பாரம்பரிய அரசியலில் வந்த வாரிசுத்தலைமைகளும் மெத்தப்படித்த புத்திஜீவித்தனம் மிக்க சித்தாந்தவாதிகளும், இடதுசாரிகள், வலதுசாரிகள், புரட்சிவாதிகள் என்று பேதமில்லாது, சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பேயில்லாத, மக்களை எப்படி ஏமாற்றுவதென்ற கலையில் வல்லவர்களான சூழ்ச்சித் திறன்மிக்க சமூகவிரோதிகளான, மூன்றாந்தர அரசியல்வாதிகளாகவே ஒவ்வொரு தேர்தலின்போதும் தம்மை இனங்காட்டிக் கொண்டே வந்துள்ளனர்.

அரசியலில் நீதி - நேர்மை, மனித உரிமைகளை மதிக்கும் பண்பு, வாக்குறுதிகளை நிறைவேற்றும் கொள்கை உறுதி, தேசத்தை - மக்களை - நேசிக்கும் மனோபாவம் என்பவை காணாமல் போய் அர்த்தமிழந்தவையாகி வெகுகாலமாகி விட்டது.

1956 இல் தற்போதைய இனவெறியாளர்களுக்கு தலைமை தாங்கி சமாதான எதிர்ப்பு சக்திகளை அணி திரட்டிநிற்கும் நிறைவேற்று அதிகார பலமிக்க ஜனாதிபதியின் தந்தையான சொலமன் வெஸ்ற் ரிச்வே டயஸ் பண்டாரநாயக்க சந்தர்ப்பவாத அரசியல்வாதி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாதியாகத் தன்னை சிங்கள மக்களிடையே இனங்காட்டி 24 மணிநேரத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை அதாவது சிங்களத்தை மட்டுமே அரச மொழியாகப் பிரகடனம் செய்யும் சட்டத்தை பிறப்பிப்பேனென மூர்க்கத்தனமான, தொலைநோக்குச் சிந்தனையற்ற வாக்குறுதியை முன்வைத்து தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியபோதே இலங்கையின் அழிவு ஆரம்பமாகிவிட்டது.

குறுகிய அரசியல் இலாபத்திற்காக அவரைத் தொடர்ந்து வந்த சிங்கள அரசியலின் முன்னணித் தலைவர்களில் பெரும்பாலானோர், ஒருவர் மற்றவரை மிஞ்சும் அளவுக்கு இனவாதம் - மதவாதம் கொண்டவர்களாக இருந்தால்தான் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற நிலை ஏற்பட்டது. இலங்கையின் வரலாற்றை இரத்தத்தால் எழுத வைத்துவிட்டது என்பதே யதார்த்தமாகும்.

இனவாதமும் - மதவாதமும், தலைக்கேறி நிற்கும் பேரினவாத சிங்களத் தலைமைகளாலும், அவர்களை அண்டிப் பிழைக்கும் ஏனைய இனமானமற்ற அரசியல்வாதிகளாலும், சிறுபான்மைச் சமூகத்தவர்கள் குறிப்பாக தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகள் மற்றும் வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் அவர்கள் மீதான இராணுவ மற்றும் பொருளாதார ரீதியிலான ஒடுக்குமுறைகளும், அடக்குமுறைகளும் அவர்களை புலம்பெயர்ந்தும், இடம் பெயர்ந்தும் ஓடவைத்து உதிரிகளாக்கிவிட்ட நிலையில், எதிர்வரும் பொதுத்தேர்தல் வரவுள்ளது.

அதுமட்டுமல்ல, கடந்த இரு தசாப்த காலத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான சூழல் நிலவும் நிலையில் நடத்தப்படும் ஒரே தேர்தல் என்றும் இதனைக் கூறமுடியும்.

இந்த யுத்த நிறுத்தமும் கடந்த தேர்தலின்போது போரின் மகத்தான வெற்றி நிலையிலிருந்து கொண்டும், இராணுவ ரீதியில் மேலோங்கிய நிலையில் இருந்துகொண்டும் விடுதலைப் புலிகளால் தென்பகுதி அரசியற்தலைமைகளுக்கும், மக்களுக்கும் விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞைதான் என்பதில் ஐயமில்லை.

போரை மட்டுமல்ல - சமாதான சூழலையும் நிதானமாகவும், வெற்றிகரமாகவும் நெடுங்காலத்திற்கு தங்களால் கடைப்பிடிக்க முடியுமென்ற செய்தியை சர்வதேச சமூகத்திற்கு ஓங்கியொலிக்க வைத்துள்ள விடுதலைப் புலிகள் தமக்கான மக்கள் ஆதரவென்பது எத்தகையது என்பதை தமிழர் தேசியக் கூட்டமைப்பினரை தாம் ஆதரிப்பதன் மூலம் தேர்தலை எதிர்கொண்டும் நிரூபிக்க முடியுமென்பதை இந்தத் தேர்தல்மூலம் எவ்வாறு உறுதிசெய்யப் போகிறார்கள் என்பதையும் உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. எனவேதான் இந்தத் தேர்தல் வடக்கு - கிழக்கு தாயக மண்ணின் மைந்தர்கள் அனைவருக்கும் முக்கியமானதாகியுள்ளது.

தியாகமும், வீரமும், திடசித்தமும் கொண்ட தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகள் யாரென்பதை உலகிற்கு உணர்த்த இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்க முடியும்.

உலகமே பிரமிக்கும் போர் வரலாற்றை படைத்த மக்கள் அதே உலகத்தை வியக்கவைக்கும் அரசியல் வரலாற்றையும் இத்தேர்தல் மூலம் படைப்பார்களென்ற எதிர்பார்ப்பில் சர்வதேசத்தின் கவனம் குவிமையம் கொண்டுள்ளது என்றால் அது மிகையில்லை.

# நாடும் நடப்பும்




# வெடிபொருள் அகற்றப்பட்ட பகுதியை மக்களிடம் வழங்க நடவடிக்கை!

## செயற்பாட்டுக்குழு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெடிபொருட்கள் அகற்றப்பட்ட நான்கு பிரதேசங்கள் விரைவில் மக்களிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாக, யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டுக்குழுவின் நடவடிக் கைப்பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.செந்தில்குமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நுணாவில் கிழக்கு, கோப்பாய், வரணி, நாவற்குழி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகளில், சிலபகுதிகள் பொதுமக்களின் பாவனைக்காக விடப்படவுள்ளது.

இதேவேளை, பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலைக்கு அருகில் வெடிபொட்களுள்ள காணிகளில் இரு விடுதிகள் உள்ளிட்ட, சில கட்டடப்பகுதிகளில் இருந்து வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

இவற்றையும் விரைவில் மாணவர்கள், ஆசிரியர்கள் நன்மைகருதி பாவனைக்கு விடத்தீமானித்துள்ளோம்.

இந்நிகழ்வுகள் இடம்பெறும் நாள்பற்றி விரைவில் அறிவிக்கவுள்ளளோம். இதேவேளை, தற்போது வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைக்கெனப் பல புதிய உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. அவை விரைவான எமது சேவைக்கு உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அஸ்கிரியபீட மகாநாயக்கர் ஆசி

(கொழும்பு)

தடைப்பட்டிருக்கும் சமாதானமுயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு மகாநாயக்க, அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் ஆசீர்வாதம் கிடைக்கும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு - கண்டி அஸ்கிரியபீட மாகாநாயக்கர் உடுகம சிறி புத்தரத்த தேரர் ஆசீர்வாதம் வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது பிரசாரக்கூட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக கண்டிக்குச் சென்றுள்ள பிரதமர் - அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கு நேற்று விஜயம் செய்தனர்.

முதலில் அஸ்கிரிய பீடத்தின் ஆசியைப் பெற்ற பிரதமர்- மல்வத்த பீடாதிபதியிடமும் ஆசிர்வாதம் பெற்றார்.

கண்டி செல்வவிநாயகர் துலியம், மீரா மகா பள்ளிவாசல், புனித அந்தோனியார் ஆலயம் இவற்றுக்குச் சென்று விசேட வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்.

பிரதமருடன் அமைச்சர் திலக் மாரப்பன, கரு ஜெயசூரியா, பந்துல குணவர்த்தன உள்ளிட்ட வேட்பாளர்கள் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

(01)

## மன்னார் சின்னக்கடைப் பகுதியில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள்

(கொழும்பு)

வன்னி தேர்தல் மாவட்டத்தின் -மன்னார் சின்னக்கடைப் பகுதியில், நேற்று அதிகாலை தேர்தல் வன்முறைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு, திரும்பிக்கொண்டிருந்தபோது அவர்கள் பயணம் செய்த வாகனம் தீயிடப்பட்டதாக மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான திகதி குறித்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட முன்பாகவும், அதற்குப் பின்னரும் வன்னியில் நடைபெற்ற முதல் வன்முறைச் சம்பவம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் நாடளாவிய ரீதியில் 33 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள், வேட்புமனுத் தாக்கலின் பின்பு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், நாடளாவியரீதியில் 116 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(01)

# அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு

## நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியனவற்றுக்கு தேர்தல் ஆணையாளர் ஒரு வழிகாட்டியாக விளங்குவதற்குச் சட்டபூர்வமாக அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

அரசாங்க ஊடகங்கள் எல்லாம் ஜனாதிபதிக்கு ஆதரவாகவும், பிரதமருக்கு எதிராகவும் செயற்படுகின்றமை குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே தேர்தல் ஆணையாளர் - தான் ஓய்வு பெறுவதற்கான ஒரு மனுவை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த போது சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும்வரை தேர்தல் ஆணையாளர் தொடர்ந்தும் ஆணைக்குழுவுக்குள்ள அதிகாரத்தில் இருப்பார் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அரசியமைப்பின் 17 ஆவது அரசியல் சட்டத்தின் 27 ஆவது பகுதி அடிப்படையில், இந்த முழு அதிகாரமும் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு.

இதன் பிரகாரம் தேர்தல் ஆணையாளர் -அரசியல் ஒலிபரப்புக்களைக் கட்டுப்படுத்த முடியும். அத்தோடு, நடுநிலைத் தன்மையைப் பேணமுடியும் என்றும், அடிப்படையில் தேர்தல் ஆணையாளருக்கு முழுமையான அதிகாரம் உண்டு எனவும் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

(01)

மக்கள் பிரச்சினை

- த.அறிவன் -

# கரையொதுங்கிய படகு மீண்டும் கடல்மேற் செல்லும் காலம்வருமா?



ஊர்காவற்துறை இறங்குதுறையில் குமுதினி தரையில் இறக்கி வைக்கப்பட்டுள்ளது

**குமுதினி படகின் விபரம்:**
**60 அடி நீளம்**
**16அடி அகலம் (நடுப்பகுதி)**
**14அடி உயரம்**
**அசோக் லேலன்ட் (1997) எந்திரம் கொண்டது**

**யாழ்ப்பாணம்** - நெடுந்தீவுக்கான பாதுகாப்பான ஒரேயொரு படகுச் சேவையான குமுதினி, 4 மாதங்களுக்கு மேலாகச் சேவையிலிருந்து விலக்கப்பட்டு, மக்கள் போக்குவரவில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற படகுகளே சேவையில் உள்ளன.

திருத்தத்திற்காக ஊர்காவற்றுறை கடற்படை இறங்குதுறையில் இது நீண்ட நாட்கள் கரையில் கட்டி விடப்பட்டிருந்தது. இது **4 மாதங்களாகத் திருத்தப்படாமைக்கான காரணம் என்ன என, யாழ்ப்பாணம்** வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருடன் தொடர்பு கொண்டபோது, கிடைத்த விபரங்களைத் தருகின்றோம்.

(தமிழர் தாயகத்தில் கடற்படையினர் 33 அப்பாவித் தமிழர்களை வெட்டிப் படுகொலை செய்த முதல் தமிழ்க் கடற்படுகொலை நிகழ்ந்தது (1985 இல்) இந்தக் குமுதினியிலேயே).

குமுதினி வகைப் போக்குவரவுப் படகு இலங்கைத்தீவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வேறெங்கும் இயக்கப்படுவதில்லை. பயன்படுத்தப்படும் ஒரேயொரு படகும் இந்தக் குமுதினியே. 1960 ஆம் ஆண்டுகளில் இது சேவைக்கு வந்தது.

வழமையாக யாழ்.தீவுகளிடையே சேவையில் ஈடுபட்டுள்ள தனியார், கூட்டுறவுப் படகுகளைவிட குமுதினி பெரியதும், வசதிகள், நிறைகூடியதுமாகும்.

இதனைத் திருத்துவதற்காகக் கரையிலேற்றி நகர்த்தக்கூடிய துலாக்கள், (WINCH) தண்டவாளங்கள், கொட்டகைகள் என்பவற்றைக் கொண்ட வசதியான வேலைத்தளம் காரைநகர் நீலங்காட்டில் இருந்தது. இதில் தேவையான வேளையில் படகுகளைத் துலாக்களினால் தூக்கி தண்டவாளத்தில் நகர்த்தி திருத்தங்களை உடனுக்குடன் செய்யக்கூடியதாக இருந்தது.

1990 இல் நீலங்காடு திருத்தத் தளம் கடற்படையினரால் பிடிக்கப்பட்டது. இன்று காரைநகர் கடற்படை (எலரா) தளத்தின் முதன்மையான அதியுயர் பாதுகாப்பு வலயமாக நீலங்காடு உள்ளது. இது இழக்கப்பட்டதால், குமுதினிக்கு அவசர திருத்தம் செய்யமுடியாது போனது. 1990 ஆம் ஆண்டு முதல் 1996 ஆண்டுவரை குமுதினி சேவை இயக்கப்படவில்லை. 1990 இல் திரிவிடபலய படை நடவடிக்கை மூலம், யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட, நெடுந்தீவு குடாநாட்டுடனான தொடர்பை இழந்து, தனித்து முற்றுகைநிலைக்குச் சென்றது.

அந்தவேளையில் குமுதினி - நெடுந்தீவின் கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவுக்கு அலையால் அடித்துச்செல்லப்பட்டு, அது மூழ்கி, இயந்திரம் கடல்நீரால் சேதமானது. அங்கு கடலில் அப்படியே கிடந்தது.

1991 இல் யாழ்ப்பாணம் முழுமையாக இராணுவ மயப்பட தீவாகப் பாதை திறக்கப்பட்டபோதே, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதனைத்தேடி கடலில் கண்டுபிடித்தது. அது கடற்படையிடம் குமுதினியை மீட்டுத்தரக் கோரியது. அன்று அங்கு கடற்படையே ஆதிக்கசக்தியாக இருந்தது. கடற்படை இதனை எடுதது தனது தளத்துக்குக் கொண்டு சென்றது. அங்கு கடற்படை சேதமான குமுதினியின் இயந்திரத்தை அகற்றி, வேறொரு அசோக் லேலண்ட் இயந்திரத்தைப் பொருத்தியது. பின் குமுதினி புறொமோட்டஸ் நிறுவனத்தாலும் திருத்தங்களுக்குட்பட்டது. 1997 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டு, மீண்டும் 7 ஆண்டுகளின் பின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

அதன்பின் குமுதினி சேவையில் ஈடுபட்டு வந்தாலும், பழுதடைந்து இடைக்கிடையே சிறுதிருத்தங்களுக்குட்பட்டு சேவையிலிருந்து விலக்கப்பட்டது.

கடைசியாக 4 மாதங்களின் முன் குமுதினி படகோட்டிகள் படகு திருத்தப்படவேண்டும் எனக் கோரியதையடுத்து, கடற்படை அனுமதியுடன் ஊர்காவற்றுறை கடற்படை இறங்குதுறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. நீலங்காடு திருத்தத் தளம் இல்லாமையால், ஊர்காவற்றுறைக் கடற்கரையிலேற்றப்பட்டே அது திருத்தப்படவேண்டும். இதற்காக அதற்குரிய வசதிகளின்மையால், அங்கு கரையிலேற்ற ஒரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், முதல் ஒரு தொகைக்கு உடன்பட்ட அவர், பின்னர் கூடியதொகையைக் கேட்டிருக்கிறார்.

இந்த இழுபறிகளின் பின் நீண்ட நாட்களின் பிறகு 25 பேரைக் கொண்டு இன்றைய நவீன தொழில்நுட்பக்காலத்தில் (கடற்படையினரின் காரணத்தினால்) ஒருவாறு தள்ளப்பட்டு கரையிலேற்றப்பட்டது. அதன் பின்னரே அதனைத் திருத்த ஆட்தேடல் நடந்தது.

இலங்கையில் கப்பல் கட்டுமாணம் சிறப்புற்று விளங்கிய ஊர்காவற்றுறையில், இதற்குரிய ஆட்கள் கிடைக்காததால் மற்றொரு பண்டைய கப்பல் கட்டுமான இடமான வல்வெட்டித்துறையில் ஒருவர் கிடைத்தார். அவரும் வேலைக் கட்டணத்தில் இழுபறி செய்தார். இறுதியாக ஒரு தொகைக்கு உடன்பட்டார். இதன்படி கடந்த 13 ஆம் திகதி இவர் வேலையை ஆரம்பிக்காமல், 20 ஆம் திகதி ஆரம்பிப்பதாகக் கூறினார். 20 இல் தான் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

குமுதினி இம்முறை முழுமையாக பலகைகள் பழுதடைந்து, துருவேறிய இரும்பு ஆணிகள் அகற்றப்பட்டு, தகடுகள் கழற்றப்பட்டு புதிதாகப் பலகைகள், ஆணிகள், தகடுகள் பொருத்தப்படுவதே வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமாகும்.

மார்ச் முதலாம் திகதிக்குள் குமுதினி சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது தமது இலக்காம். ஆனால், இது மார்ச் 15 ஆக மாற்றப்பட வேண்டியுள்ளதாம்.

பின்னர் இப்படி பல திகதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் கூறினர். ஆனால், குமுதினியோ மீளவில்லை சேவைக்கு. இரண்டு படகுகளைத் தாம் அரச நிதியமைச்சு செயலரிடம் கேட்டதாகவும், அவர் இந்திய கடனுதவித் திட்டத்தின்கீழ் 2 படகுகளைப் பெற்றுத்தர ஆவனசெய்து தருவதாகக் கூறினார் எனவும், ஆனால் இன்றுவரை அது உறுதிசெய்யப்படவில்லை என றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர். கூறுகின்றனர்.

1985 ஆம் ஆண்டில் குமுதினியில் 33 அப்பாவி மக்களைப் படுகொலை செய்தபோது, அந்த மக்களுக்காக இறுதி நிகழ்வில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் நிலாந்தன் எழுதிய கவிதையின் வரிகள் சில!

**'கடலம்மா கடலம்மா**
**குமுதினி ஏன் பிந்திவந்தாள்**
**எங்கள் அவலங்களைச்**
**சடலங்களாய்ச் சுமந்து வந்தாள்'**

தமிழரின் வரலாற்றின் முதல் கடற்படுகொலைச் சின்னமான குமுதினியின் வரவினை - நெடுந்தீவு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் முப்பத்துமூவரின் ஆன்மாக்கள் அதனுள் இருக்கின்றன. நெடுந்தீவின் ஆன்மாக்களோடு அது கலந்துவிட்டிருக்கின்றது. அது தமிழரின் படுகொலை நினைவுச்சின்னம். எத்தனை படகுகள் நெடுந்தீவுககு நவீனங்களுடன் வந்து மறைந்திருக்கின்றன. ஆனால், குமுதினி 40 ஆண்டுகளாக 33 ஆன்மாக்களின் அன்றைய அவலக்குரல்களுடன் பிரியமறுக்கின்றது.

குமுதினி நிவாரணியின்றி நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறது. மீளவும் அவலங்களைச் சடலங்களுடன் அல்லாது தம் உறவாகிவிட்ட குமுதினியை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

யாழ்.புங்குடுதீவு - குறிகாட்டுவானில் இருந்து 7 கடல் மைல்கள் தொலைவில் ஆழ்கடலில் நெடுந்தீவு உள்ளது. ஆழ்கடலில் இருப்பதால் இதற்கு சிறப்புக்கட்டுமானப்படகுகளே போக்குவரத்தில் பயன்பட்டு வந்தன. 1963 இல் கட்டப்பட்ட குமுதினி என்ற கூடாரமடிக்கப்பட்ட மரக் கட்டுமான, வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் படகே தொடர்ந்து போக்குவரத்துக்குப் பயன்பட்டுவந்தது.



நெடுந்தீவுப் போக்குவரத்தில் பாதுகாப்பு அற்ற உதயதாரகைப் படகு

தமிழீழ வரலாறில் முதல் கடற்படுகொலை - சிறிலங்கா கடற்படையினரால் 1985 மே மாதம் 15 ஆம் திகதி குமுதினிப்படகிலேயே நிகழ்ந்தது.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடற்போக்குவரத்தில் 6 பயணிகள் படகுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயக்கப்பட்டுவந்தன.

குமுதினி, எலரா, வடதாரகை, மணிமேகலை, அலையரசி, வலம்புரி என்பன அப்படகுகளாகும். இவை குறிகாட்டுவானிலிருந்து, நெடுந்தீவு செல்ல ஒருமணி நேரம் எடுக்கும். இவற்றில் இருக்கைகளிலிருந்து 75 பேரும், நின்று 25 பேருமாக 100 பேர் பயணஞ்செய்யலாம். இவற்றைவிட உலோகத்தால் ஒரு கப்பல்போன்ற வசதிகளுடன், மழைநீர் உட்புகாமல், குடிநீர் வசதிகளுடன் 2 படகுகள் கட்டப்பட்டு, போக்குவரவில் ஈடுபடுத்தப்பட்டன. அவை அலையரசி, வலம்புரி என்பனவாகும். 1980 களில் அலையரசி பழுதடைந்து ஊர்காவற்றுறை - காரைநகர் நீலங்காடு கடலில் மூழ்கிவிட்டது.

1990 ஆம் ஆண்டில் வலம்புரி படகு சிறிலங்கா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுவிட்டது. வலம்புரி 50 நிமிடங்களில் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும்.

இதில் 125 பேர் பயணம் செய்யலாம். 1991 ஆம் ஆண்டில் வலம்புரியையும், வடதாரகைப் படகையும் சிறிலங்கா கடற்படை கைப்பற்றி தனது போக்குவரத்தில் பயன்படுத்தியது. இவற்றில் அதிவேக வலம்புரி படகினை திருக்கோணமலை - யாழ்ப்பாண போக்குவரத்துக்குக் கடற்படை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்துள்ளது. படைபோக்குவரத்தில் இருந்த வலம்புரி - 1998 ஆம் ஆண்டில் யாழ். பருத்தித்துறைக் கடற்பரப்பில் போரில் தாக்கப்பட்டு மூழ்கிப்போனது.

இதைவிட, கடற்படை கைப்பற்றி தனது பயன்பாட்டில் வைத்திருந்த நெடுந்தீவு மக்கள் போக்குவரவுக்கான - வடதாரகை படகுக்கு என்ன நடந்தது. ஏனையவை இப்போது எங்குள்ளன என்பதே தெரியாதுள்ளது.

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு 1933 ஆம் ஆண்டில் மேதர் என்ற இயந்திரப்படகு ஈடுபடுத்தப்பட்டது.

நெடுந்தீவுக்கும் - ஊர்காவற்றுறைக்கும் தொடர்ந்து பிரிட்டிஷ்சாரின் இலங்கை அரசு 40 பேர் பயணிக்கக்கூடிய சில்வர்ஸ்பிறே இயந்திரப்படகைச் சேவையில் விட்டது.

இதன்பின் உள்ளூர்வாசிகளால் 10 பேர் முதலிட்டு, ஒரு பயணிகள் படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதேவேளை தனியாரால் சீகுயின், எம்எம்எல் ஆகிய படகுகளும் போக்குவரத்தில் ஈடுபட்டன. 1950 ஆம் ஆண்டுகளில் இராஜேஸ்வரி என்ற தனியார் படகு போக்குவரத்தில் பங்குகொண்டது.

இவற்றின் பின்பே குமுதினி, எலரா, வடதாரகை, மணிமேகலை, அலையரசி, வலம்புரி என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. ☼



காரைநகர் சிறிலங்கா கடற்படைத் தலைமையகத்தில் நீலங்காடு வீதி அபிவிருத்தி அதிகார அமைப்பின் கடற்படைத் தளத்தில் நீலங்காடு RDA படகுத் திருத்த வேலைத்தளம்

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

**பொருளாதார முன்...**

பெருமிடத்தை வகிக்கும் முஸ்லிம் மக்களின் தொகை 1.7 பில்லியன் (170 கோடி) இன்று இவர்களின் முதலாவது எதிரியாக கருதப்படும் யூதர் இனம் உலகம் முழுவதுமாக 13.5 மில்லியன் (ஒருகோடியே 35 இலட்சம்) சனத்தொகையை மட்டுமே கொண்ட ஒருசிறிய இனம். பிரித்துப் பார்த்தால் ஒரு யூதருக்கு 126 முஸ்லிம்கள் என்று வரும். இருப்பினும், யூத மக்களது பொருளாதார பலமானது வல்லரசுகளின் செல்வாக்கையும், பலத்தையும் பெற்றுள்ளதால் இவர்களை எவராலும் வெல்ல முடியாதநிலை இன்று. 2000 வருடங்களுக்கு முன்பு நாடற்றவர்களாக உலகம் முழுவதும் சிதறிய யூத இனம் இன்று பலம் பெற்றவர்களாக திகழ்கிறார்கள் என்றால், அவர்கள் தங்கள் இனத்தின் மீதுவைத்த வலிமையான மாறாப்போக்கும், இழந்த நாட்டையும், உரிமையையும் மீட்கும் நோக்குடன் 25 சந்ததிகளாக மனதில் படிந்துவந்த இன உணர்வே இன்றைய அவர்களின் மேலோங்கிய தன்மைக்கு காரணம். யூதர்களுக்கு அப்படி என்றால்? நாம் ஆறு மடங்கைச் சமாளிப்பது ஒரு பிரச்சினை அல்ல?

இன்றைய கால கட்டத்தில் உலக நடையறிந்து நாம் வாழவேணடும். ஔவையின் ஆத்திசூடியும் அன்று அதையே சொன்னது 'ஒப்புர ஒழுகு'.

பொருளாதார முன்னெடுப்புகளில் இன்று உலகம் சுழல்கிறது. நாமும் அதையே கைப்பற்றவேண்டும். வெளிநாடுகளில் வாழுந்தமிழர்களுக்கு இது ஒரு சரியான காலமாகும். பொருளாதார முன்னெடுப்புக்களை மேம்படுத்தும் பல வியாபார திட்டங்களையும், குறுகிய காலத்தில் ஈழவர்கள் புலம்பெயர் மண்ணில் தனிப்படச் செய்து சாதனைகள் படைத்துள்ளார்கள்.

ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இந்தியா, இலங்கை மற்றும் பல நாடுகளில் ஈழத்தமிழர்கள் பொருளாதாரரீதியான முதலீட்டு வர்த்தக நிலைகளில் மேலோங்கி வருவது கண்கூடே. தனியார் வர்த்தக நிலையங்கள், நிதி நிறுவனங்கள், தொலைத் தொடர்பு, பிரயாண முகவர்மையங்கள், கணினி தொழில்நுட்பம் பங்குச்சந்தை முதலீட்டு வைப்புக்கள், தொடர்புசாதன வெளிபாடுகள், சமூக பண்பாட்டு மையங்கள், தனியார் மருத்துவம், தொழில்நுட்ப, பலசார் கல்லூரிகள் சர்வதேச ரீதியான ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள் என்று சொல்லிக் கொண்டு போகுமளவுக்கு எங்கள் முன்னேற்றங்கள் சர்வதேச மட்டத்தில் வளர்ச்சி கண்டுள்ளன.

அரசியலில் - குறிப்பாக இங்கிலாந்து மற்றும் வடஅமரிக்கா (கனடா) வில் மாநகர பாராளுமன்ற இடங்களையும் ஈழவர்கள் வகித்து வருவது உற்றுநோக்க வேண்டியதே.

காலப்போக்கில் இந்தப்பலமானது தமிழனை தலையோங்கச் செய்யும். நாம் ஒன்று சேர்ந்து உழைப்போம். உலகின் பலதரப்பட்ட மையங்களில் வாழ்ந்தாலும், தவிர்க்க முடியாத சில நடைமுறைகளுக்கு உட்பட்டாலும், தலைநிமிர்ந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்.

- நன்றி - தமிழ் உலகம்.

## இஸ்ரேல், காஸா நுழைவாயிலில் திடீர் மோதல்; மூவர் பலியாகினர்!

இஸ்ரேல், காஸா ஆகிய பிரதேசங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ள எரெஷ்ஷில் பலஸ்தீன துப்பாக்கிதாரிகளுக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஒரு இஸ்ரேலியப் படைவீரர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் இரு பலஸ்தீன துப்பாக்கிதாரிகள கொல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பலஸ்தீனப் போராளிக்குழுவான அல் அகுசா தியாகிகள் - இந்தத் தாக்குதலுக்கு உரிமைகோரியுள்ளனர். தாக்குதல் நடைபெற்ற பின்னர் அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தப் பிரதேசம் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலியர்களும், பலஸ்தீனர்கள் சந்தித்துக்கொள்ளும் இடமாக எரெஷ் அமைந்துள்ளது. பலஸ்தீனர்கள் தொழில் முயற்சிகளுக்காக இந்தப் பிரதேசத்தைக் கடந்துசெல்லும் நேரங்களில் ஆயுதங்களைத் தேடுவதற்காக உடற்பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதனால் அதிகாலையிலேயே பலஸ்தீன வேலையாட்கள் கூடிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உதவிப் பணிகளில் ஈடுபட்டவேளை ஆப்கானில் தாக்குதல்; ஐவர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உதவிப்பணிகளை மேற்கொண்டிருந்தவர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 5 ஆப்கானிஸ்தானியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்தனர். மேலும் ஒரு உதவிப்பணியாளர் காணாமற்போயுள்ளதாகவும் உள்துறை அமைச்சர் அலி அகமட் ஜலாலி தெரிவித்தார்.

கந்தகார் நகரின் தென்பகுதிக்கு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் விஜயத்தை மேற்கொண்டிருந்தவேளையில் இந்தத் தாக்குதல் நிகழ்ந்தது. அவர் பாகிஸ்தான் எல்லையில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரையும் தனது விஜயத்தின்போது சந்திப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்.

மேலும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தனது விஜயத்தின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கமிட் கர்சாயையும் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானில் அண்மைக்காலத்தில் நடைபெற்றுவரும் தாக்குதல்களுக்கு தலிபான் போரளிகளே காரணமென தெரிவிக்கப்படுகிறது. மேலும் தாக்குதலுக்குள்ளாகும் உதவிப் பணியாளர்கள் கிராமப் பகுதிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

## நிறம் மாறும் கரடிகள்



சிங்கப்பூரில் உள்ள மிருகக்காட்சிச்சாலையில் ஷீபா என்ற பனிக்கரடி அடைக்கப்பட்டு இருந்தது. அந்தக் கரடியுடன் அதன் குட்டிகளும் அடைக்கப்பட்டிருந்தன. வெள்ளை நிறத்திலிருந்த அந்தக் கரடிகளுக்கு சிங்கப்பூரின் தட்ப வெப்பநிலை ஒத்துக்கொள்ளவில்லை.

இதனால் இந்தக் கரடிகள் வெள்ளை நிறம் மாறி கறுப்பாக மற்ற சாதாரண கரடிகள் போல மாறிவிட்டது. இதனால் கரடிகளுக்கு அடிக்கடி பிளீச்சிங் செய்து பல நிறங்களில் சாயங்களைப் பூசி வருகிறார்கள். அடிக்கடி இந்தக் கரடிகள் நிறம் மாறுகிறது. அதுவும் நன்றாகத்தான் இருக்கிறது.

## புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு; ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன!

பங்களாதேஷில் உள்ள உலகின் மிகப்பெரிய ஆற்றோர மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியில் வாழும் பெங்காலிய புலிகளின் எண்ணிக்கையைக் கணிப்பிட விஞ்ஞானிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்தியா - பங்களாதேஷ் எல்லையில் இதுபோன்ற கணிப்பீடுகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இவ்வகையான புலிகள் அழிந்துசெல்வதாக இந்தியாவில் கணிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவே ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

50 பேர்கொண்ட குழுவொன்று அடுத்தவாரம் பெங்காலிய புலிகளின் எண்ணிக்கையைக் கணிப்பீடு செய்வதில் ஈடுபடவுள்ளது.

இவ்வகையான புலிகள் - மனித நடமாட்டமுள்ள பிரதேசங்களை தவிர்த்துவரும் இயல்பைக் கொண்டுள்ளன. இதனால் இவற்றின் பாதச்சுவடுகள் மூலம் எண்ணிக்கையைக் கணிப்பிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

மேலும், மனிதனின் கைவிரல் அடையாளத்தில் மாற்றங்கள் காணப்படுவது போன்று புலிகளின் பாதச்சுவடுகளிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன. புலிகள் வாழும் பகுதி சதுப்பு நிலமாகக் காணப்படுவதால், களிமண்ணில் பதிந்திருக்கும் பாதச் சுவடுகளில் காணப்படும் மாறுபாடுகளைக்கொண்டு அவற்றின் எண்ணிக்கையை கணிப்பிடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.



இவ்வகையான புலிகள் தொடர்பாக அண்மையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின்படி, புலிக்குட்டிகளின் பாதச்சுவடுகள் அதிகரித்துக்காணப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இதன்மூலம் இவ்வகையான புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இவ்வகைப் புலிகளினால் ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 20 பேர் கொல்லப்படுகின்றனர். புலிகளின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு ஜூலை மாதமளவில் முழுமையாக வெளியிடப்படும் என கணிப்பீட்டாளர் குழு தெரிவித்துள்ளது.

## கண்ணிவெடி தாக்குதலில் 8 இந்திய இராணுவத்தினர் பலி

இந்திய மேற்கு வங்காள மாநிலத்தின் தெற்குப்பகுதியில் மக்கள் போர்ப்படையினர், மாவோஜிஸ்ட், கம்யூனிஸ்ட் மையம் ஆகியவற்றைச் சேர்ந்து போராளிகள் நேற்று முன்தினம் இரவு திடீரென்று தாக்குதல் நடத்தினர். அத்துடன் போராளிகள் வீதியில் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி கிழக்கு எல்லைப்புற ரைபிள் படையைச் சேர்ந்த எட்டு படையினர் பலியாகினர். 4 படையினர் படுகாயம் அடைந்தனர்.

இராணுவத்தினர் வந்த லொறி கண்ணிவெடியில் சிக்கி சுக்குநூறாகச் சிதறியது. போராளிகள் தாக்குதல் நடத்திய இடம் ஜார்க்கண்ட் மாநில எல்லையை ஒட்டியுள்ளது.

## கொலம்பியாவில் அரச படையினருக்கும் கெரில்லாக்களுக்கும் இடையே மோதல்

### 12 படைவீரர்கள் பலி



கொலம்பியாவின் தென்மாகாணத்தில் அமைந்துள்ள குய்லா என்ற பிரதேசத்தில் கொலம்பிய கெரில்லாக்களுக்கும், அரச படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 12 படையினர் கொல்லப்பட்டும், 15 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்விரு சம்பவங்களும் அரசுக்கு பரந்தளவில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தமையால், கொலம்பிய ஜனாதிபதி அல்வரோ உரிப் தாககுதல் நடைபெற்ற பிரதேசத்திற்கு பொறுப்பாகக் கடமையாற்றிய இராணுவ அதிகாரிகளையும், இரகசியப் பொலிஸின் தலைமை அதிகாரியையும் பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.

ஜனாதிபதி உரிப் - கொலம்பியப் போராளிகளை முற்றாக ஒழித்துவிடுவதாகத் தெரிவித்தே தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். ஆனால், கொலம்பிய தீவிரவாதிகளான கொலம்பிய புரட்சிகர இராணுவப்படையின் எண்ணிக்கை, குய்லாவிலுள்ள அரச படைகளின் எண்ணிக்கையிலும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குய்லாவில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் மூன்று செல்வந்த வர்த்தகர்களைக் கடத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

## முடிவுகள் எட்டப்படாத நிலையில் பெய்ஜிங் அணு ஆயுத மாநாடு





சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் 6 நாடுகள் கலந்துகொள்ளும் வடகொரிய அணு ஆயுத அமைப்புக்கள் தொடர்பான மூன்று நாள் மாநாட்டின் இரண்டாவது நாள் பேச்சிலும், எந்த முடிவும் எட்டப்படவில்லை.

நேற்றைய பேச்சுக்களின்போது வட கொரியா நஷ்டஈட்டுப் பணத்தை பெற்றுக் கொணடு அணு ஆயுத அமைப்புக்கள் நிறுத்திவிடவேண்டும் என தென்கொரியா கருத்துத் தெரிவித்தது.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பான வேறு தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை என ரொய்ட்டர் செய்தித் தாபனம் தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை ஆரம்பித்த பேச்சுவார்த்தையில் அமெரிக்க அதிகாரியான ஜேம்ஷ் கெலி கருத்துத் தெரிவிக்கும்போது -

வட கொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களை முற்றாக நிறுத்த வேண்டும் என தெரிவித்தார்.

தம்மிடம் யுரேனியத்தை பயன்படுத்தி அணுஆயதங்களைத் தயாரிக்கும் திட்டங்கள் எவையும் கிடையாதெனவும், வேறு ஒரு உலோகமான புளூட்டோனியம் தொடர்பான உற்பத்தியை நிறுத்திவிட முன்வருவதாகவும் வடகொரியா தெரிவித்தது. மேலும் அதற்கு ஈடாக அமெரிக்கா பொருளாதார உதவிகளை வழங்கவேண்டும் எனவும் கேட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வட கொரியா தன்னிடம் யூரேனியம் தொடர்பான அணுசக்தித் திட்டங்கள் உண்டென தெரிவித்த பின்னரே அணு ஆயுதம் தொடர்பான பிரச்சினை உருவாகத்தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

## இத்தாலிய சுரங்கப் பாதையில் தாக்குதல் மேற்கொள்ள முயற்சி



இத்தாலிய நகரமான மிலானில் அமைந்துள்ள சுரங்கப்பாதை ஒன்றில் குண்டுத்தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்ததாக சந்தேகித்து வட ஆபிரிக்கர் மூவரை இத்தாலியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தவிர மொரோக்கோ, ருனிசியா, ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐவருக்கு எதிராகவும் இத்தாலியப் பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளனர்.

இவர்கள் கிரிமோனா என்ற நகரில் மதத் தலைவர்களாகச் சேவை புரிந்து வந்துள்ளனர்.

இத்தாலியின் தீவிரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளின் ஒரு பகுதியாகவே இவர்களின் கைது அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேவாலயம் ஒன்றின் கீழ்ப்பகுதியில் அமைந்திருந்த சுரங்கப்பாதையைத் தகர்ப்பதன் மூலம் தேவாலயத்துக்கு சேதம் ஏற்படுத்த இவர்கள் முயற்சிகள் மேற்கொண்டிருந்ததாகப் புலன் விசாரணைகளை மேற்கோள்காட்டி இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## விமானம் விபத்துக்குள்ளாகி மசிடோனிய ஜனாதிபதி பலி!



மசிடோனியா நாட்டு ஜனாதிபதி பொறிஸ் ரஜ்கோவ்ஸ்கி விமான விபத்தில் கொல்லப்பட்டார். இவருடன் பயணஞ்செய்த மேலும் 8 பேர் உயிரிழந்தனர். பலத்தமழை மற்றும் பனிப்புகார் காரணமாக இந்த விமானம் மலையில்மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரியவருகிறது.

இவர் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற அல்பேனிய இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுக்களில முக்கிய பங்குவகித்தவர்.

இவரின் மரணத்தைத் தொடர்ந்து நாடாளுமன்றப் பேச்சாளர் யூப்கோ ஜோர்டானோவஸ்கி தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மசிடோனியாவின் எல்லைப்புறங்களான பொஸ்னியா மற்றும் இதர பகுதிகளில் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொஸ்னியா மற்றும் மொன்ரநீக்கோ ஆகிய இடங்களுக்கிடையிலான எல்லைப்பகுதியில் விமானம் பயணஞ்செய்துகொண்டிருந்தபோது ராடரிலிருந்து மறைந்துவிட்டதாகவும், விமானம் கட்டுப்பாட்டாளருடனான தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டதாகவும் அமெரிக்க சமாதானப் பேச்சாளர் தெரிவிக்கின்றனர்.

## இந்திய போர் விமானம் வீழ்ந்து நொருங்கியது

இந்திய விமானப்படையைச் சேர்ந்த ஜாகுவார் போர்விமானம் பொக்ரான் அருகே விபததுக்குள்ளானது. இதில் விமானி ரவிகன்னா பலியானார். அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கண்காட்சிக்காக இந்த விமானம் நேற்று பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மா விமானத் தளத்திலிருந்து கிளம்பிய விமானம் பயிற்சியில் ஈடுபட்டுக் கொணடிருக்கும்போது பொக்ரான் அருகே விபததுக்குள்ளானது. ரவகன்னா சம்பவ இடத்திலேயே பலியானார். விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் பகுதியில் பிரசாரம்; அரசு பாதுகாப்பளிக்க வேண்டும்!

## டக்ளஸ் தேவானந்தா கோருகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரசாரம் மேற்கொள்ளவும், ஏ-9 பாதையில் பயணம் செய்யவும் தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுபற்றி டக்ளஸ் தேவானந்த கருத்து தெரிவிக்கையில் -

இந்தத் தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உள்ள மக்களும் வாக்களிக்கவுள்ளனர். இதனால், அந்தப்பகுதி மக்கள் மத்தியில் சென்று எங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். அதனால், அந்தப்பகுதிக்குச் செல்வதற்கு எங்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

அரசு பாதுகாப்பு வழங்கினால் நாங்கள் அந்தப்பகுதிகளுக்குச் சென்று பிரசாரத்தில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தமது உறுப்பினர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுகிறதாம்!

### ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

தமது கட்சியின் மீது பல்வேறு இடங்களிலும் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சி தெரிவித்துள்ளதாவது,

நுவரெலியா - திகலகஸ்கட வில் எமது ஐந்து வாகனங்கள் தேசமாக்கப்பட்டமை குறித்தும், ஆதரவாளர் ஒருவர் தாக்கிக் காயப்படுத்தப்பட்டது தொடர்பாகவும் வலப்பனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம்.

அத்துடன், எம்பிலிப்பிட்டியவிலும் எமது உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

இதேவேளை - தம்புள்ளையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஒலி பெருக்கிகள் மூலம் அறிவிப்புக்களில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை தாம் கொலைப் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக மூன்று மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் தெரிவிதத்துள்ளனர். (01)

### பெறுபேறுகள் வெளியாகின

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட முதலாமாண்டு மாணவர்களின் பெறுபேறுகள் நேற்றுவெளியிடப்பட்டன. தற்போது இரண்டாம் வருடத்தில் கல்விகற்பதற்காக பெறுபேறுகளை எதிர்நோக்கியிருந்த மாணவர்களுக்குரிய முதலாம் வருடத்தில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் அரையாண்டுப் பெறுபேறுகளே வெளியிடப்பட்டன.

## நாற்சந்தி



"ஏப்ரல் மாதம் ரெண்டாம் திகதி தமிழர்களின் பாரம்பரிய பூமியான வடக்கிலும், கிழக்கிலும் மற்றொரு பாரிய பொங்குதமிழ் நிகழ்வெல்லே நடக்கப்போகுது...."

"என்ன செல்லையா மணியம் எல்லா இடமும் ஒரே நேரத்தில பொங்கு தமிழ் நிகழ்வோ.... அதெப்படி சாத்தியம்.... ஆரோ உனக்கு ரீல் விட்டிருக்கினம்...."

"எனக்கொருத்தரும் ரீல் விடேல்லை.... ஏப்ரல் இரண்டாம் திகதி தேர்தல் ஒரு பொங்கு தமிழ் நிகழ்வாகத்தான் இருக்கப்போகுது... கனக..."

"அட அதைச்சொல்லுறியோ.... எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்....எங்கள் நிலமே எங்களுக்கு வேணுடும் என்று தமிழ் மக்கள் பொங்கும் தமிழுணர்வுடன், தமிழன் என்ற உணர்வுடன் வாக்களிக்க வேண்டிய தேர்தல் பொங்கு தமிழாகத்தான் இருக்க வேண்டும் கண்டியோ....!"

"முந்தி மக்களிடம் வேட்பாளர்கள் வாக்குறுதி அளிப்பார்கள். ஆனால், இந்த முறை வாக்காளர்கள் அதாவது தமிழ் மக்கள் வேட்பாளர்களிடம் கட்டளை பிறப்பிக்கப் போகிறார்கள். அதை நிறைவேற்றுமாறு வாக்குறுதி கேட்டு வாக்களிக்கப் போகிறார்கள்.... எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும் அவ்வளவு தான்"

"ஓ..... றோட்டுப் போடவோ, கோவில் கட்டவோ, கக்கூசு கட்டவோ எங்களுக்கு ஒருத்தரும் ஒன்றும் பண்ணவேண்டாம், எங்கடை நிலம் தான் எங்களுக்கு வேண்டும். அதுதான் இந்தத் தேர்தல் பொங்கு தமிழின் ஒரே கோஷமாக ஓங்கி ஒலிக்கப் போகுது...."

"சரியாய்ச் சொன்னாய்.... றோட்டையும், பூட்டையும், றோட்டையும் காட்டி இனி எங்கடை சனத்தை ஏமாத்தேலாது.... எங்கடை வீடுதான் எங்களுக்கு வேணும்..... எங்கடை மண்தான் எங்களுக்கு வேணும்.... எங்கடை தோட்டம், துரவு, வயல், வெளியெல்லாம் எங்களுக்காக வேண்டும்..... அவ்வளவுதான்."

தெருவிழி

## மனித உரிமை...

கள் குறித்தோ தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.

எனினும், இராணுவத்தினரும் பொலிஸாரும் சித்திரவதை, பாலியல் வல்லுறவு என்பவற்றுடன் சிறைச்சாலைகளில் ஒழுங்கு விதிகளை மீறி வருவதாகவும் இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், ஊடகவியலாளர்கள் மீதான படையினரின் அத்துமீறல்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தக்காலப் பகுதியில் பெண்கள் மற்றும் சிறுவர் பாலியல் வல்லுறவு என்பன குறைவடைந்துள்ள அதேவேளை வர்த்தக செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படையின்....

மூலம் காணாமற்போன மீனவரைத் தேடக் கண்டுபிடிக்க முடியாது போய் விட்டதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் கடற்படையும் அறிவித்தது.

## போர்நிறுத்த உடன்படிக்கையை...

சிங்க எனக்கோ, அமைச்சரவைக்கோ அறிவிக்காது - சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். ஆனால், எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்களில் சகல தரப்பினரையும் இணைத்து புலிகளுடன் பேசவுள்ளோம்.

வரலாற்றில் முதன்முறையாக விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அதைச் சிறப்பாகப் பேணிவருகின்றனர். இதைவிட ஆட்சிநடத்தும் எந்தவொரு தரப்பினருடனும் தாம் பேச்சு நடத்தத்தயார் எனக் கூறி உள்ளனர். இதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரசாரக்கூட்டம் ஆரம்பிக்க முன்னர் நமது நாட்டில் வாழ்க்கைத் தரத்தையும், உற்பத்தியையும் மேம்படுத்த ஒரு வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர்ப்பணிப்புடன் செயற்படும் என அனுராதபுர சிறிமாபோதி விகாரைக்கு அண்மையில் உறுதியெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க - சுதந்திர...

பெற்றனர். இதில் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரம் அனுராதபுர ஜயசிறி மகா போதியில் இடம்பெற்ற மதவழிபாட்டுடன் ஆரம்பமானது.

சகல இனங்களுக்கும் சமமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர்ப்பணிப்புடன் செயற்படுமென்று உறுதி வழங்கப்பட்டது.

நிறைவேற்று அதிகார ஒழுங்கு முறையை இல்லாதொழித்து மக்களின் அபிப்ராயத்தை நியாயமான முறையில் பிரநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்தல் முறையை மாற்றியமைககவும் அங்கு உறுதி வழங்கப்பட்டது.

அத்துடன், அரசாங்க கட்டமைப்பொன்றைக் கட்டியெழுப்பும் வகையிலும், நியாயமான நல்லாட்சி முறையை அறிமுகப்படுத்துவதற்கு அரசியல் அமைப்பொன்றை உருவாக்க முன்னணி உறுதியளித்துள்ளது.

கலப்புப் பொருளாதாரத்தின் கீழ், சமூகத்தின் வாழ்வு நிலையையும், உற்பத்தியையும் மேம்படுத்த உறுதியான பொருளாதார மாதிரியொன்றைக் கட்டியெழுப்பி, அனைவருக்கும் சமமான பொருளாதார நலன்கள் கிட்டும் வாய்ப்பை வழங்கவும் இந்த முன்னணி செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் மகிந்த ராஜபக்ஷ சோமவன்ச அமரசிங்க, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச ஆகியோர் கலந்துகொண்டனர்.

## லொறி மோதி.....

கொண்டிருந்த வயோதிபரை மோதிய லொறியின் சாரதி, இரத்த வெள்ளத்தில் அவர் துடித்துக்கொண்டிருப்பதைக்கண்டு அச்சமடைந்து லொறியை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு தலைமறைவானார்.

இதையடுத்து, அந்தப்பகுதியில் கூடியமக்கள் வயோதிபரை வைத்திய சாலையில் அனுமதித்ததுடன், பொலிஸாருக்கும் தகவல் கொடுத்தனர்.

அங்குவந்த பொலிஸார் அந்தப் பகுதியில் அநாதரவாக நின்றிருந்த லொறியை பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்.

லொறியின் உரிமையாளர் நேற்று பொலஸாரிடம் சென்று தனது லொறியைத் தருமாறு கோரினார். அதற்குப் பொலிஸார் வயோதிபரை மோதிய லொறிச்சாரதியை அழைத்து வருமாறு கூறினர்.

இதனையடுத்து, நேற்று நண்பகல் லொறிச் சாரதி யாழ். பொலிஸில் சரணடைந்தார்.

லொறி மோதி இறந்தவரின் உடல் அடையாளங்காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேதப் பரிசோதனை இன்று நடைபெறவுள்ளதாகவும், லொறியின் சாரதி எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில், இறந்தவர் காரை நகரைச் சேர்ந்த அவரது உறவினரால் நேற்றிரவு அடையாளங் காட்டப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ப)

## அட்டாளை....

யளவில் இடம்பெற்றது.

இதன் பின்னர் அங்குவந்த விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் அந்தப் பகுதியில் எரிக்கப்பட்ட ரயர்களினை அப்புறப்படுத்தி வீதி இரு மருங்கிலும் பலத்த பாதுகாப்பினை ஏற்படுத்திய பின்னரே இவர்களின் வாகனங்கள் அந்தப் பகுதியால் சென்றன. (07)

## ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே 1 ஆவது நாடாளுமன்ற உறுப்பினர்

### ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்படுவார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி என்ற வகையில் தானே இந்த நியமனத்தை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் கூட்டணியின் தேசியப் பட்டியலில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் இடம்பெறவில்லை. ஒத்துமாறும் ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில்தான் இவரது பெயர் தேசியப்பட்டியலில் இடம்பெறவில்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு ஆயுதவிற்பனை...

தங்களை விற்பனை செய்தாலும் வெளிநாட்டுக்கொள்கை தடையாக இருக்காது. ஆனால், நாம் ஆயுதங்களைத் தொடர்ந்து விற்பனை செய்வதால், வெளிநாட்டுக் கொள்கை கட்டாயமாகப் பாதிப்படையும். இதற்கு நல்ல உதாரணம் அங்கே வன்செயல் நடக்கிறது. நாம் எமது ஆயுத விற்பனையைத் தொடாந்தால் அங்கு மேலும் பாதிப்புக்கள் தான் ஏற்படும்

இலங்கையின் ஆயுதப்படையினரின் விசேட பிரிவொன்று சட்டத்தை மதித்து நடப்பதில்லையென நாம் அறிந்துள்ளோம். எனவே வேறு சில நாடுகளும் இணைந்து இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என நாம் முடிவெடுத்துள்ளோம்.

இதேவேளை இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆயுத விறபனையை மேற்கொள்வதில் ஒரே வெளிநாட்டுக்கொள்கையை கொண்டுள்ளபோதும், இந்த நாடுகளின் இ[illegible]தக் கொள்கைக்கு எதிராக தென்னாபிரிக்கா தற்பேதைய இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றென தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை நிலைய இடமாற்றம்

**29.02.2004 ஞாயிறு நடைபெறவுள்ள வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அறிவுப் பரீட்சைக்குத் தோற்றும் தரங்கள் 8,9,10,11,12,13 மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலிருந்து யாழ்.இந்துக் கல்லூரிக்கு இடமாற்றப் பட்டுள்ளது. மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

கௌரவ செயலாளர்,
சைவசமய அபிவிருத்திக் கழகம்.

(644)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.